# காதல் மனம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

தென்றல் வெளியீடு ௧௮.

# காதல் மணம்.

ஆசிரியர்:

ப. கண்ணன்.

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,

சலகண்டபுரம் ::: சேலம் மாவட்டம்.

1-ST EDN. JULY 1955.

# KADHAL MANAM.

(ALL RIGHTS RESERVED)

Published by:
THENRAL BOOKS PUBLISHING SOCIETY,
Printed at:
THE SENTHAMIZH PRINTING WORKS,
Jalakantapuram. Salem Dt.

0-8-0

# பதிப்புரை.

தமிழ் மொழியின் சிறுகதை இலக்கியம், செழித்து வளரும் மலர்த் தோட்டம்! இதனில் பலவகைப்பட்ட செடிகள் உண்டு. இவற்றிலே நிறத்தாலும், மணத்தாலும், குணத்தாலும் வேறுபட்ட பூக்கள் பலப்பல மலர்ந்து, தோட்டத்தை வளப்படுத்தி வருகின்றன.

திங்கள் இதழ்—வார இதழ்கள் மட்டுமல்லாமல், நாளிதழ்களும் சிறுகதைகளை மிகுதியாக வெளியிடுகின்றன. பொதுமக்களின் கதைருசி, கதையார்வம் வளர்ந்து வருவதே இதற்குக் காரணம். ஆனால், சிறுகதைகள் எழுதுவோர்—வெளியிடுவோர்களின் அடிப்படை எண்ணங்கள், அவற்றிலே பிரதிபலிக்கத் தவறுவதில்லை. இதயத்தில் இருப்பவைதானே எழுத்திலே பரிமளிக்கும்?

புதுமை இலக்கியத் தலைமுறைகளான அறிஞர் அண்ணாவும், தம்பிமார்களும் தவிர, மற்ற பெரும்பான்மையான எழுத்தாளர்கள் குணத்தைப் புறக்கணித்துவிட்டு, நிறத்திற்கும், மணத்திற்குமே முதன்மையளிக்கின்றனர். வெளியிடுவோரும் நிறத்தால் கவர்ந்து, மணத்தால் மயக்கவே முனைகின்றனர். எனினும், குணத்திற்கு முதன்மையளிக்கும் சிறுகதை மலர்கள், தோட்டத்திலே தலைகாட்டத்தான் செய்கின்றன; பயனும் தருகின்றன. அந்த வகையிலே இந்தக் "காதல் மணம்" ஒன்று என்பது எங்கள் நம்பிக்கை.

தோழர், ப. கண்ணன் அவர்கள், நாடு நலமுறப் பணியாற்றும் ஏடுகள் சிலவற்றிலே எழுதியிருந்த மூன்று சிறுகதைகளைத் தொகுத்து, இந்நூலினை வெளியிடுகின்றோம். படிப்போரின் சிந்தனையைத் தூண்டிவிட்டு, சமுதாயச் சீர்கேட்டினை நினைவிலேற்றும் குணமுள்ளவை இக்கதைகள். எங்கள் சிறு முயற்சியினைத் தமிழகம் ஏற்பதாகுமாக.

தென்றல் நூற்பதிப்புக் கழகத்தார்

1-ST EDN. JULY 1955.

# KADHAL MANAM.

(ALL RIGHTS RESERVED)

Published by:
THENRAL BOOKS PUBLISHING SOCIETY,
Printed at :
THE SENTHAMIZH PRINTING WORKS,
Jalakontapuram. - - Salem Dt.

0-8-0

## ஆசிரியரின் பிறநூல்கள்.

நாடகம்:

புரட்சிப் பாடகன்.

கன்னியின் சபதம்.

மின்னொளி.

நாவல்:

ஜமீன்தார்.

சிறுகதை:

சிந்தனைச் சித்திரம்.

★★

# குலகுரு மகாத்மியம்

சேகரனுக்கு வயது பத்து. சின்னஞ்சிறு பள்ளி மாணவன். ஆனாலும் வயதுக்கு மிஞ்சிய புத்திசாலித் தனம் படைத்திருந்தான். அந்தப் பத்தாம் பசலிக் குடும்பத்திலே அவன் பிறந்தது அபூர்வ நிகழ்ச்சி, அவன் சேற்றில் மலர்ந்த செந்தாமரை! ஆழ்ந்த நோக்குடையோர் அப்படித்தான் செப்பினார்கள்.

அன்று பள்ளியினின்றும் வந்த சேகரன், செல்ல மாக அப்பாவின் மடியில் உட்கார்ந்தான். "அப்பா! செல்வன் பாரப்பா என்னைக் கேலிசெய்கிறான்" என்று மிகுந்த வருத்தத்துடன் சொன்னான்.

"எதற்காகடா கேலி செய்தான்?" என்று கேட்டார் அனுயாசமாக, எங்கோ பார்த்தவண்ணம் பாலசுந்தரம். அவர் கவனம் வேறெங்கோ படர்ந்திருந்தது.

சேகரன் கூறினன்: "யாரோ ஒருத்தன் நம்ம சாதிக்குக் குலகுருவாம்; அவன் நாளைக்கு நம்மவூருக்கு வரப்போறானும்; அவன் காலிலே நாமெல்லாம் வெட்கமில்லாமல் விழப்போறேமாம்; பணம் தருவோமாம். மூடத்தனமாக மனிதனின் கால் கழுவிய தண்ணீரை நாமெல்லாம் மகாப் பிரசாதமென்று குடிப்போமாம். அவன் பெரிய அயோக்யனும். இன்னும் என்னென்னமோ கேவலமாகப் பேசறானப்பா செல்வன்! பள்ளிக்கூடப் பையன்களெல்லாம் சிரிக்கிறாங்க." சிறுவனின் வாடியமுகத்தைக் கவனித்தார் தந்தை.

சேகரனின் சொற்கள், பாலசுந்தரத்தின் மனத்தைச் சிறுசிறு அம்புகளாகத் துளைத்தன. கோபம் கொப்பளித்து அவர் கண்களைச் சிவக்க வைத்தது. சேகரனை முறைத்துப் பார்த்தார். அவனது களங்கமற்ற பார்வை, மாசுமறுவற்ற வதனம், ஒரு தந்தையின் கடமையை அவருக்கு நினைவூட்டின. கோபம் சற்றுத் தணிந்தது; சாந்தமாகக் கூறினர்: "சேகர்! செல்வனின் அப்பா மாணிக்கம் ஒரு நாஸ்திகன். சாமியில்லே, பூதமில்லே, சாஸ்திரமில்லே என்று சொல்லித்திரிபவன்; பக்தியில்லாத மூர்க்கன். அப்பன் புத்திதானே மகனுக்கும் வரும்? செல்வன் ஒரு நாஸ்திகக் குஞ்சு. அவர்கள் பேசுவதெல்லாம் முட்டாள்தனம்—குறும்புத்தனம்! அந்தப் பயல்கள் சாவகாசமே உனக்கு வேண்டாம். நீயும் கெட்டுப் போவாயடா" அவரது குரல், நெஞ்சில் எரியும் ஆத்திரத்தைக் காட்டிற்று.

"ஆமாம்; குலகுரு என்றால் யாரப்பா? அவருக்கென்ன வேலை? எவ்வளவு படித்திருப்பார்?" என்று

கேட்டான் சேகரன். இளங்கன்று பயமறியாதல்லவா?

''சேகர்! அது பெரிய விஷயம்; உனக்கு விளங்காது. இருந்தாலும் சுருக்கமாகச் சொல்லுகிறேன். குலகுரு என்பவர் ஒவ்வொரு குலம், அல்லது சாதிக்கும் தலைவரைப் போன்றவர். மனிதர்க்கு பாரமார்த்திக போதனைகளையளித்து, ஆச்சார அனுஷ்டானங்களை நிர்ணயித்து, கடவுளின் அருளுக்குப் பாத்திரமாக்கும் ஞானாசிரியர்—மகாத்மா. நல்லொழுக்க போதகர். அவரது கருணைகடாட்சத்தால் நமக்குப் பல காரியங்கள் சித்தியாகும்'' என்றார் பாலசுந்தரம். ஒரு தனிப்பெருமையும், பக்தியும் பளிச்சிட்டன அவரது முகத்திலே.

சேகரன் இன்னும் என்னவோ கேட்க வாயெடுத்தான். அதற்குள் சமையல் அறையிலிருந்து தாயின் அழைப்புக்குரல் வந்தது. தொடர்ந்து பசியும் நினைவுக்கு வரவே, அவன் தந்தையின் மடியினின்றும் துள்ளிக் குதித்து உள்ளே ஓடிவிட்டான்.

பாலசுந்தரம் எழுந்தார் வெற்றிப் புன்னகையுடன். செல்வமகன் சேகரனின் மாறுபட்ட மனத்தைத் தன் வழியிலே திருப்பிவிட்டதாக நம்பினார்; மகிழ்ந்தார். அவரது நெஞ்சத்திலே மீண்டும் பழையபடி நினைவு அலைகள்........

நாளைய தினம் புலிசை நகருக்கு வருகை தரும் குலகுருவைத் தகுந்த முறையில் வரவேற்க வேண்டும். காலமோ சாதகமாயில்லை. அவருக்கு ஆண்டுதோறும் செலுத்தவேண்டிய காணிக்கை, வரிப்பண

வகுலை திருப்தியாக முடிக்கவேண்டும். இந்தக் காரியங்களுக்கெல்லாம் அவர் மனதிற்குள் திட்டம் உருவாயிற்று. செயலாற்ற விரும்பினார். ஊர்ப் பெரியதனக்காரர் பிரபு இரங்கநாதஞ் செட்டியார் வீட்டைநோக்கி நடந்தார் பாலசுந்தரம்.

● ●

இரவு மணி எட்டு இருக்கும். புலிசைநகர் கந்தசுவாமி கோயிலில் பக்தர்களின் ஆரவாரம்! அதிர்வேட்டுக்கள் பேரொலியுடன் வானத்தை ஊடுருவிச்சென்றன. மேளவாத்தியங்கள் 'ஜாம்ஜாம்' என முழங்கின. அந்தணர்களின் வேதபாராயண முழக்கம், பிராமணீயம் இன்னும் செத்துப்போக வில்லை என்பதை மெய்ப்பித்துக்கொண்டிருந்தது. மின்சாரப் புதுமை விளக்குகள்; பழமையின்மீது சுடர்விட்டுப் பிரகாசித்தன. கணீர் கணீரென்ற சேகண்டியோசை. துத்தாரி—எக்காளம் முழங்கின. பக்தர்களிடையே பரபரப்பு. யாவரும் குருநாதரின் பாதசேவைக்கு விரைந்து கொண்டிருந்தனர்.

புகழ்பெற்ற அந்தக் கந்தசுவாமி கோயிலிலே, வடதிசைஉள்பிராகாரத்திலே அமைக்கப்பட்டிருந்த அலங்காரபீடத்தின் மீது,நித்யானந்த சொரூபியாக வீற்றிருந்தார் ஸ்ரீமது; குமரானந்த தில்லைச் சிற்றம் பல குருசுவாமிகள். வயது முப்பதுக்குமேலிராது. கட்டுத்தளராத கொழுத்த உடல். அழகிய வட்ட முகம். சிவப்பு நிறம். அருள்பொழியும் பெருநோக்கு. தங்கத்தாலான உருத்திராட்சமாலைகளோடு, பலரக சைவச்சின்னங்கள் அவரது மேனியை அலங்கரித் துக் கொண்டிருந்தன! பாதங்களின்கீழ் பூசைப்

பொருள்கள். இரண்டுபெரிய தட்டுகளிலே காணிக்கை—வெள்ளிநாணயங்களாகக் காட்சியளித்தன. அதுவன்றி, பக்தர்கள் மனமுவந்தளிக்கும் குருதட்சிணைப் பொருள்கள் வேறு.

பூசை ஆரம்பமாயிற்று. பக்தர்கள் சன்னதிவிட்டு ஒழுங்காக தரிசிக்க நின்றூர்கள். கோயில் குருக்களிலே ஒருவர் மணியோசை எழுப்பினூர். சோமநாத குருக்கள் முறைப்படி மந்திரம் முழக்கி, கிரியைகளை முடித்தார். கற்பூரம் கொளுத்தினூர். தட்டினை வெகுவினயத்தோடும், பணிவோடும் தூக்கி குருநாதரின் முன்பு ஏந்தினூர். ஒரு பக்தர் நிதானமாக—ஆனூல் பலத்த குரலில் "சம்போ சங்கர மகாதேவா" என்றூர். அதைத்தொடர்ந்து அனைவரும் "அரஃகரமகாதேவா" என்று கோஷித்தனர். கன்னத்திலடித்துக்கொண்டு, சாஷ்டாங்கமாகக் கீழே விழுந்து பணிந்தனர். வாத்தியங்களும் உச்சஸ்தாயிலே முழங்கின! பூசையேற்ற குருநாதரின் முகம் புளகாங்கிதத்தால் மலர்ந்தது. உதடுகள் விரிந்து தெய்வீக மகிழ்வைக் காட்டின. கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம் சிந்தியது! என்னே பக்தர்களின் பண்பு! என்னே பக்தியின் மகத்துவம்!

தந்தை செய்ததுபோலவெல்லாம் செய்து கொண்டு வந்தான் சேகரன். ஆனூல் எல்லோரும் கீழே விழுந்து வணங்கும்போது, செல்வனின் நினைப்பு வந்துவிட்டது! "வெட்கமில்லாமல்" என்ற சொல், பெரிய உருவிலே சிரித்துக்கொண்டு அவன் முன்னூல் நின்றது! விழுந்து பணிய அந்த இளம் உள்ளம் நாணியது. யோசித்தபடியே நின்றுவிட்டான்.

அவனுக்குப் பின்புறமிருந்து 'இளுக்' கென்ற ஒரு சிரிப்பு! திரும்பிப் பார்த்தான். ஒரு தூண் மறைவிலே தன்னையும் மற்றவர்களையும் பார்த்துச் சிரித்த வண்ணம் நின்றுகொண்டிருந்தான் செல்வன்! அந்தச் சிறியமனதிலே பெரியகுழப்பம்! பலஉணர்ச்சிகள், எண்ணங்கள் கிளைத்துக் கொழுந்துவிட்டன. செல்வனின் சிரிப்பால் பொங்கிய தன்மானவுணர்ச்சி, சேகரனின் நெஞ்சிலே சிறந்ததோர் லட்சியமாக உருவெடுத்தது. கும்பிட்ட கையை எடுத்தான். மெதுவாகக் கூட்டத்தைவிட்டு நழுவினான்; செல்வனிடம் வந்தான். இருவரும் முன்மண்டபத்தருகே சென்றனர். அவன் கரங்களைப் பற்றிக் கொண்டு பரிதாபமாகச் சொன்னான்: "அண்ணே! நீ சொன்னது நடந்தது. நானும் கும்பிட்டேன். ஆனல், நிஜமா வெக்கங்கெட்டு விழுந்து கும்பிடவேயில்லையண்ணே!" என்று.

செல்வன் தனக்குள் பீறிட்டுக்கிளம்பும் சிரிப்பை அடக்கிக்கொண்டு கூறினான்: "நானும் பார்த்தேன் சேகர். உன்னிடம் மானவுணர்ச்சி இருக்கிறது" என்று. பிறகு அவர்களிருவரும் கிளம்பினார்கள் கோயிலைவிட்டு

● ●

கந்தசாமி கோவில் அர்ச்சகர் சோமநாத குருக்கள் வீட்டிலே, குருநாதருக்காக ஒரு தனிஅறை ஒதுக்கப்பட்டிருந்தது. அதுவே அவரது நியம நிஷ்டைக்குரிய தனிப் பூசையறை. அங்கு பக்தி மணத்தோடு வேறுபல மணங்களும் கமழ்ந்தன.

"போனமாசம் எங்கண்ணேவோடு நான் வந்திருந்தபோது, நீங்கள் வெளியூருக்கு சஞ்சாரம்

போயிருந்தீர்கள். இருப்பீர்களென்று நம்பிவந்தவள் ஏமாந்து போய்விட்டேன். என்மனசு என்னபாடு பட்டது தெரியுமா?" என்று கேட்டது ஒரு இனிய குரல். அந்தக் கேள்வியிலே கனிவும் ஏமாற்றமும் கரைபுரண்டன.

"அலமு! என்ன செய்வது! ஒரு நல்ல சந்தர்ப்பத்தை இழந்துவிட்டேன். நீ வரும்விஷயம் எனக்குத் தெரிந்திருந்தால், சஞ்சாரத்தைக்கூட ஒத்திப்போட்டிருப்பேன். எனக்குப் பணம் பிரதானமென்றாலும், உன்னிடம் பெறும் சுகத்திற்கு ஈடாகுமா அந்தப் பணம்? போனது போகட்டும். இப்பொழுதாவது காலத்தை வீணுக்காமல்........." கொஞ்சிப் பேசிய வண்ணம் குழைந்தது ஒரு குரல்! சிறு சலசலப்பு! 'இச்'சென்று முத்தமிட்ட இன்பவொலி வந்தது.

"ஐயே! விடுங்கள்; என்ன அவசரம்? இங்கு வேண்டாம். யாராவது வந்துவிடுவார்கள். இன்றைக்குப் பௌர்ணமி நிலா. இரவு ரெண்டு மணிக்கு கோயில் நந்தவனத்தில்...உம்?..." என்று சொல்லி தன்னை விடுவித்துக்கொண்டாள் அலமேலு. சேலையைச் சரிப்படுத்தினுள். அவள்மார்பகம் விம்மித்தணிந்தது.

அதே நேரத்தில், அறையின் வெளிப்புறத்திலே ஒரு கனைப்புக்குரல்! அவர்கள் நடுங்கினர். பேச்சு நின்றது. திடுக்கிட்டு எழுந்தாள் அலமேலு. அவளுக்கு தன்னைப்பற்றிய கவலையில்லை. குருநாதருக்குக் கெட்டபெயர் வரக்கூடாதே! பிறகு சந்தடியேது மில்லை. பயம் தெளிந்தது; மீண்டும் சாதாரண முறையில் குருநாதர் கேட்டார்: "அண்ணாவின் பொருளாதாரம், குடும்பக்ஷேமம் எப்படி?" என்று.

அவள் சொன்னாள்: "அதையேன் கேட்கிறீர்கள்? பழைய நிலைமை அடியோடு மாறிவிட்டது. போதுமான வரும்படியில்லை. நிரம்ப கஷ்டம். யாரோ சுயமரியாதைக்காரர்களாமே; அவர்கள் போடுகிற கூச்சலால் கோயிலில் கூட்டம் குறைந்து விட்டது. திதி திவசமெல்லாம் தொலைந்தது. பிராமணனுக்கிருந்த மதிப்பே போய்விட்டது. அவர்களை ஒழிக்க நீங்கள் ஒரு மார்க்கம் செய்யவேண்டும்." அலமேலுவின் ஆத்திரம் கண்களிலே ஒளிர்ந்தது.

"ஆமாம்! எங்கள் ஊரிலுங்கூட இப்படித்தான் சிலர் துள்ளினார்கள். தகுந்த ஆட்களைப் பிடித்தேன்; அடக்கிவிட்டேன். அவர்களை வளரவிட்டால், பிராமண சமூகமே அழிந்துவிடும். இன்றே இதைப் பற்றி நாலு பெரிய மனுஷாளிடம் சொல்லி வைக்கிறேன்; கவலைப்படாதே. அலமு! என் மகனைக் கல்லூரியில் சேர்த்துவிட்டேன். குடும்பச்செலவு அதிகரித்துவிட்டது. எனக்கும் உங்கண்ணாவுக்கும் சேர்த்து, பெரியவரும்படிக்கு வகைபார்க்க வேண்டும். அதற்குக் கும்பாபிஷேகம் நல்ல வழி. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டாமோ? காலப் போக்கை யார் கண்டார்கள்" என்றார் குருநாதர் கண்களைச் சிமிட்டியவண்ணம்.

சோமநாத குருக்கள் வந்தார். "அலமு! மன்னி குளத்திற்குப் போயிருக்கிறாள். ட்ரைவர் சாயபு சாப்பாட்டுக்கு வந்து வெகுநேரமாக வெளியே நிற்கிறான். போய் அவனுக்குச் சாதம் போடு" என்றார். அண்ணன் கட்டளையை நிறைவேற்றச் சென்றாள் அந்த இளம்விதவை அலமேலு.

ஸ்ரீமது, குமரானந்த தில்லைச் சிற்றம்பல குருசுவாமிகளும், சோமநாத குருக்களும் சேர்ந்து கும்பாபிஷேகம் என்ற அடிப்படையின்மேல் தம் வாழ்வு பெருக்க பெரியதோர் மனக்கோட்டையைக் கட்டி முடித்தனர் அந்தரங்கமாக!

● ●

"இரவு பூசையின்போது,குருசுவாமிகள் சொன்னதை கவனித்தீர்களோ?" என்று கேட்டார் இரங்கநாதஞ் செட்டியார், வாயிலிருந்த வெற்றிலையை குதப்பிக்கொண்டே.

"முழுதும் கேட்டுக்கொண்டுதானிருந்தேன். வாஸ்தவந்தான். காரணமில்லாமலா நமக்கெல்லாம் தொழில் கஷ்டமும், வியாபார நஷ்டமும் ஏற்படுகிறது? தெய்வப்பழுது! தெய்வ குற்றந்தான்! இப்பத்தானே தெரிகிறது" என்றார் பாலசுந்தரம்.

"இல்லை, எனக்கு அப்பொழுதே தெரியும். சுயமரியாதைச் சங்கம் எப்பொழுது நம்மவூரில் வைத்தார்களோ, அப்பொழுதே சொல்லியிருக்கிறேன்; நம்மவர்களுக்கு விநாசகாலந்தானென்று! கடவுளையும் பூர்வீக தரும சாஸ்திரங்களையும் தூற்றுவதும், பரிகசிப்பதும் சும்மா விட்டுவிடுமா? பகவானே தலை சாய்ந்துவிட்டார். எல்லாம் பட்டால்தானே தெரியும்" என்றார் சற்று கோபத்தோடு, இரங்கநாதஞ் செட்டியார். அவரது கொடுவாள்மீசை படபடத்தது. "என்னவோ வைத்தார்கள், தலைகொழுத்துப்போய் பேசினார்கள், ஆண்டவனின் தலைசாய்ந்து, ஜீவனும் மகிமையும் தொலைந்தன. இனிமேலாவது அந்த நாஸ்திக மாணிக்கம், கிருஷ்ணன், ராமநாதன்

முதலானவர்களைக் கூப்பிட்டு தக்க புத்திமதிகளைச் சொல்லவேண்டும். சங்கத்தைக் கலைத்துவிட்டு, கோயில் திருப்பணியை ஒழுங்குபடுத்தி, கும்பாபி ஷேகம் நடப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்று கூறினார் பாலசுந்தரம்.

''இரண்டொருவர் சொன்னால் அந்தப் பயல் களிடம் எதுவும் நடக்காதையா! நம்ம உறவுமுறைக் கூட்டத்தைக் கூட்டவேண்டும். அவன்களை இழுத்து வந்து புத்தி கற்பிக்கவேண்டும். மேலும் கும்பாபி ஷேகம் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். குறைந்தது ஐயாயிரம் ரூபாயாவது பிடிக்குமென்று சொல்லு கிறார் குருசுவாமிகள். செலவைப் பார்ப்பதிலே பயனில்லை. கந்தய்யனை இப்படியே விட்டுவைத்திருந் தால், நம்ம குலமே நசித்துவிடும். சுபம் சீக்கிரம். அடுத்த வாரமே நல்லநாள் பார்த்து வசூல் ஆரம் பித்துவிட வேண்டும்'' என்று முடித்தார் இரங்க நாதஞ் செட்டியார். பரவசப்பட்டது அவரது பக்தி யுள்ளம். ஒருபக்கமாக உட்கார்ந்து, இந்தச் சொல் லாடலை கவனித்துக் கொண்டிருந்தான் சேகரன். செட்டியார் வெளியே சென்றபிறகு மெதுவாகத் தந்தையிடம் சென்றான். அவன் கேட்டான்:

''அப்பா! சுவாமிக்கு உயிர் கொடுக்க ஐயாயிரம் ரூபா செல்லுமா? கும்பாபிஷேகம் நடத்தி உயிர் வந்துவிட்டால், அது நம்மோடெல்லாம் பேசுமாப்பா? அப்புறம் வியாபாரம் தொழில் நன்றாக நடக்குமா? ஏப்பா!......'' இன்னும் என்னவோ கேட்க வாயெடுத் தான் சேகரன். தந்தையின் திபரவிய முகத்தைப் பார்த்ததும் திகைத்து நிறுத்திக்கொண்டான்.

பக்தர் பாலசுந்தரத்தின் சிவப்பேறிய கண்களி னின்றும் கிளம்பிய கோபநெருப்பு சிறுவனை திக்குமுக்கலாடச் செய்தது! அவன் உள்ளம் நடுங் கிற்று. எதிரில் நிற்க முடியாமல் மெதுவாக நகர்ந் தான். மூடத்தனம் அங்கே புன்னகை புரிந்தது காலத்தை உணராமல்!

● ●

சோமநாத குருக்கள், கந்தசுவாமி கோயிலின் பரம்பரை அர்ச்சகர் வழியிலே வந்தவர். அலமேலு அவரது ஒரே தங்கை; இளம் விதவை. வயது இருபத்தி ஒன்றே. வளமான தேகமும், வனப் பும் படைத்தவள். அவளது கரியகண்களின் பார்வை கல்நெஞ்சையும் கரைக்கும் வன்மை படைத்தது. அவளது இன்பவாழ்வைப் பறித்துவிட்டது பாழும் சமூகச் சம்பிரதாயம். எனினும், இன்பம் நுகரப் பல சந்தர்ப்பங்கள் அவளுக்குக் கிடைத்தன. அவ ளது இளமைத்துடிப்பு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவும் தவறவில்லை.

குருக்கள் வீட்டிலே, ஓட்டல்களைப்போல் மாதச் சாப்பாடு போடுவது வழக்கம். பல வெளியூர்க்காரர் கள் சாப்பிட்டனர். அதிலே சிறிது வருமானமும் கிடைத்துவந்தது.

சையத்பாட்சா, இரங்கநாதஞ் செட்டியாரின் காரோட்டி, உடல் முறுக்கேறிய வாலியன். அவனுக்குக் குடும்பம் கிடையாது. குருக்கள் வீட்டில் தான் சாப்பிடுகிறான். குருக்கள் மனைவியும், சில நேரங்களில் அலமேலுவும் சாதம் போடுவதுண்டு. அலமேலுவின் பார்வை எப்படியோ அவனைக் கவர் ந்துவிட்டது. கருத்து ஒன்றிவிட்டனர். கண்ணுறவு

வாயுறவாக மாறி; உடலுறவாகக் கனிந்துவிட்டது. சையத்பாட்சா பக்குவமாக நடந்துகொண்டு, குருக்கள் வீட்டுத் திண்ணையிலேயே ராப்படுக்கை போட்டுவிட்டான். சோமநாத குருக்களுக்கு அவன் மீது சந்தேகமே தோன்றவில்லை. இரவில் தன் வீட்டைப் பாதுகாக்கும் அந்த வாலிபனது பிராமணபக்தியை மெச்சினார். செட்டியாரிடமும் கூறினார். பாட்சாவுக்கு நிரம்ப சௌகரியம், இன்பம் பெருக்க!

அவன் தாழ்வாரத்திலே சாப்பிட உட்கார்ந்தான். வீட்டில் யாருமில்லை. வழக்கத்திற்கு மாறாக உற்சாகமில்லாமலும், பேசாமலும் பரிமாறினாள் அலமேலு. பாட்சாவின் மனதில் சந்தேகம்; அவளை ஏறிட்டுப் பார்த்தான். பேச முயன்றான். முகத்தைத் திருப்பிக் கொண்டு உள்ளே சென்று விட்டாள் அலமேலு. அவளது புறக்கணிப்பு அவனுக்குப் புதுமையாக இருந்தது. ஏதோ தவறு செய்தானென்று, காலையில் இரங்கநாதன் செட்டியார் கடுமையாக அவனை வைதிருந்தார். இங்குவந்தால் இவளும் அலட்சியப் படுத்துகிறாளே! நினைக்க நினைக்க, அவனுக்குச் சாப்பாடு செல்லவில்லை. எழுந்து கையலம்பினான். அலமேலுவை அருகில் அழைத்தான். வேண்டா வெறுப்போடு, முகத்தைச் சுளித்துக்கொண்டு வந்து நின்றாள், அந்த வண்டு விழியாள்.

அவன் கேட்டான்: "அலமு! என்மேல் என்ன வருத்தம்? ஏன் பேச மறுக்கிறாய்? ஏதாவது புதிய கிறுக்கு கிடைத்துவிட்டதா?" கிண்டலும் கோபமும் கொதித்தன அவன் குரலில்.

அலமேலுக்கு ஆத்திரம் வந்தது; "பாட்சா! பார்த்தையா உன் ஈனப்புத்தியை காண்பிக்கறயே!

என்னை என்ன தேவடியாளென்று நினைத்து விட்டாய்? உன் சாவகாசம் வைத்ததே தப்பு. மனைவி மாதிரி நான் நடந்து கொண்டிருந்தும், கொஞ்சம் கூட யோசனையில்லாமல்தானே பேசுகிறாய்? இது ......"
அதற்குள் யாரோ வரும் காலடியோசை கேட்டது; பேச்சு நின்றது.

சோமநாத குருக்களிடம் ஏதோ அவசர வேலையாக வந்தார் பாலசுந்தரம். தாழ்வாரத்தில் சையத் பாட்சாவும், அலமேலுவும் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டதும் அவர் இதயம் துணுக்குற்றது. சையத் பாட்சாவின் மேல் ஆத்திரம் பொங்கி வழிந்தது; முறைத்துப்பார்த்தார். நழுவிச் சென்றான் பாட்சா. அவர் மனம் ஆறவில்லை. அவனைப்பற்றிய ஏதோ ஒரு முடிவு செய்துகொண்டு திரும்பினார் பாலசுந்தரம். அலமேலுவிடம் முகம்கொடுத்துப் பேசவே அவர் மனம் இடங்தரவில்லை.

● ●

அந்தப் பெரியதோப்பும், அழகிய நந்தவனமும், கோயிலுக்குச் சொந்தமானவை. வானத்தையளாவிய தென்னை, கமுகு, பலா முதலிய மரங்கள் செழித்து வளர்ந்திருந்தன. சகல வகைப் பூச்செடிகளும் நந்தவனத்தை அலங்கரித்தன. தெய்வ சொத்தென்றும் பாராமல், தோப்பிலே திருட்டு நிகழ்வதால், முரடர்கள் இருவரை காவலாகப் போட்டிருந்தனர். அலமுவுக்கு அது தெரியாது.

வானத்திலே மேகப்படலங்கள் சந்திரனை மறைத்தன. கருக்கலிருட்டு. குருக்கள் வீட்டு

ஓட்டைக் கெடிகாரம் மூன்றடித்து ஓய்ந்தது. எல்லோரும் அயர்ந்த நித்திரையிலிருந்தனர். ஆனல்; அந்த இரண்டு பிராணிகள் மட்டும் கண்ணயரவில்லை. அவரும் அவளும் மெதுவாக எழுந்தனர். ஓசைப்படாமல் புழக்கடை வாசலையடைந்தனர். அருகே நந்தவனம்; சுமார் முப்பதுமுழத் தூரந்தானிருக்கும். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, வாசற்படியைத் தாண்டினர். அப்பொழுது வீட்டிற்குள்ளிருந்து வந்த 'லொக்கு லொக்' கென்ற இருமல் குரல் அவர்களைத் திடுக்கிடவைத்தது. அலமுவின் பாட்டி அவ்வாறு இருமினள்; பதைத்தாள் பேத்தி.

அவர் காதுக்குள் மெதுவாகச் சொன்னுன்: "பார்த்தீர்களா! இந்த இழவுக்குத்தான் வீட்டில் கூடாதென்றேன். பாட்டிக்குக் காசநோய், இரவு முழுதும் தூங்குவதேயில்லை. கடமாடிக்கொண்டே இருக்கும். நந்தவனத்திலென்றால் மனம்போலிருக்கலாம். யார் வரப்போகிறார்கள்?" குருநாதரின் முகத்திலே இன்ப வெறியும் களிப்பும் கலந்தன. பூனைபோல் நடந்து நந்தவனத்தையடைந்தனர். வேலியைத் தாண்டி உள்ளே நுழைந்தனர்.

நந்தவனத்தின் நடுவே ஒரு தாமரைக்குளம். அதன் கரையிலே.ஒரு அழகிய நாற்கால் மண்டபம். அலமுவுக்கு அந்த இடமெல்லாம் பழக்கமானவை. ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு இருவரும் உட்கார்ந்தனர் மண்டப மேடையில். மலர் மணமும், குளிர்காற்றும் வீசின. வானம் இருண்டுக்கொண்டு வந்தது. மழைக்குறி தோன்றிற்று. குருநாதரின் மனம் சற்று பேதலித்தது. மரம் செடிகள் காற்றுல் அசைவது, பேய்கள் ஆடுவதுபோலிருந்தன. அவர்

மனதில் ஏதோ நிகில்பாய்ந்தது. அச்சம் உச்சிக் குடுமியை எட்டிப் பிடித்தது! அவர் கூறினார்:

"அலமு! பெண் புத்தி பின்புத்தியென்பது சரியாகத்தான் போயிற்று. இந்த அநாதரவான இடத்திலா நாம் இன்பத்தைச் சுவைக்க முடியும்? யாராவது வந்துவிட்டால்!" பயத்தால் அவரது குரல் நடுங்கியது. உணர்ச்சி ஒடுங்கியது.

"அப்படிச் சொல்லாதீர்கள், நல்ல சமயத்தில் பயந்து நடுங்காதீர்கள். யாரும் இங்கு வரமாட்டார்கள்" இப்படிச்சொல்லி, ஆர்வத்தோடு அவரைக் கட்டித்தழுவிக் கொண்டாள் காரிகை அலமு. அவரது உள்ளத்திலும் உடம்பிலும் புதியதோர் தெம்பு பிறந்தது. இன்பக்கேணியிலே இறங்கினர் இருவரும்; ஒவ்வொருபடியாகத் தாண்டிச் சென்று அதிலே மூழ்கிப் போயினர் சுவடு தெரியாமல்!

எங்கிருந்தோ திடீரென்று கைகளில் தொண்ணை சகிதம் தோன்றினர், தோப்புக்காவலர்கள். "நாய்களே! என்ன செய்யறீங்க? மாங்காயும் தேங்காயும் திருடுவதில்லாமே, இந்த மானங்கெட்ட வேலையுமா ஆரம்பிச்சுட்டீங்க கோயில் நந்தவனத்திலே? பிடியண்ணே இவங்களை கட்டிப்போடுவோம்" என்று மிரட்டியவண்ணம் நெருங்கினான் ஒருவன். "மண்டையைப் பிளக்கிறேன் பார்" என்று தொண்ணையைச் சுழற்றினான் மற்றவன். கும்பிட்டனர், குழைந்தனர்.

அந்தோ! அவர்கள்பாடு விலவிலத்துப் போய் விட்டது. ஐய்யோ முறையோவென்று கத்தினர். ஆனால், அந்தமுரடர்களின் காதிலே ஏறவில்லை அவர்கள் தீனக்குரல். அளவிறந்த கோபம்; சற்று போதை

வேறு! பலநாள் திருடர்கள் பிடிபட்டார்களென்று தப்பு இப்பென்று தாராளமாக புடைத்தார்கள். எவ்வளவோ கெஞ்சிக்கூத்தாடியும் விடவில்லை. இருவரையும் ஒன்றாகப்பிணைத்துக்கட்டி, ஊர்ச்சாவடிக்கு இழுத்துச் சென்றார்கள். அங்கே ஒரு தூணிலே கட்டிப் போட்டனர் இரண்டு சீவன்களையும்.

மேகம் கனிந்து நன்றாக இருட்டிவிட்டது. மழையும் பிசு பிசு வென்று தூறிக்கொண்டிருந்தது. அந்த நேரத்திலே சாவடியில் ஒரே அமர்க்களம். குழப்பமறிந்து பலபேர் வந்தனர். பெரிய கும்பல் சேர்ந்து விட்டது. நந்தவனக் கள்வர்கள் இன்னாரென்று தெரிந்துகொள்ள அவசியமில்லாமலேயே பலரும் பலவிதமாகத் திட்டவும், காறித்துப்பவும் செய்தார்கள். கடவுள் சொத்தைக் களவாடியவரை சும்மா விடலாமோ?

இரங்கநாதஞ் செட்டியாருக்கும், பாலசுந்தரத்திற்கும் செய்திஎட்டிற்று. ஆளுக்கொரு லாந்தரைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்தனர் அந்த இரவிலே. கூட்டம் வழிவிட்டது. இரண்டு லாந்தர்களும் தூணில் பிணைக்கப்பட்டிருந்த திருடர்களின் முகத்திற்கு நேராக உயர்த்தப்பட்டன. ஆ! வியப்பு வியப்பு! குலகுருவும், குருக்கள்வீட்டு அலமுவும் உயிர்ப்பிணமாய்க் காட்சியளித்தனர்!!

என்ன ஆச்சரியம்! நேற்று முன்னாள் நித்தியானந்த சொரூபியாக, பக்தர்களின் பாதபூசையேற்று மகிழ்ந்த, ஸ்ரீமது குமரானந்த தில்லைச் சிற்றம்பல குருசுவாமிகளுக்கா இந்தக் கதி? அவரா கள்வர்? அந்த தெய்வப்பிறவியா திருடும்? அந்த

இளம் விதவை தலைமேலு ஏன் அவரோடு? எதற்கு? இது களவா? காமமா?

வாயைப்பிளந்து, எல்லோரும் அசைவற்று நின்றுவிட்டனர்! கூட்டத்திலே ஒரு சிரிப்பொலி. பாலசுந்தரம் திரும்பிப் பார்த்தார். செல்வன்! இறுவனின் முகம் பார்க்க முடியாமல் தலைகவிழ்ந்தார்!

● ●

மறுநாள் காலை, பத்துமணி இருக்கும். பாலசுந்தரத்தின் வீட்டிலே அவரும், இரங்கநாதஞ் செட்டியாரும், சோமநாத குருக்களும் உட்கார்ந்திருந்தனர். அவர்களது முகங்களிலே பக்தியொளி வீசவில்லை. வெட்கம், துக்கம், வேதனை எல்லாம் உறைந்து கிடந்தன! சுடலை மௌனம் அங்கே குடிகொண்டிருந்தது.

குருக்கள் மெதுவாகத் தொடங்கினார்: "பாலு; இந்த அக்ரமம் எங்காவது நடக்குமா? குருசுவாமிகளும், அலமுவும் ஒரு பாவமும் அறியமாட்டார்கள். யாரோ வேணுமென்றே சதி செய்திருக்கிறார்கள். அந்தக் காவலாளிகள் பிராமணனைக் கைநீண்டி அடிக்கலாமா? இதனால் யாருக்கு அவமானம்? மாணிக்கம், கிருஷ்ணன், சுப்ரமணியம் போன்றவர்களை நீங்கள் ஏன் விசாரித்துத் தண்டிக்கக்கூடாது? இதுதானா பிராமண விச்வாசம்? உங்கள் முன்னோர்களாயிருந்தால், இந்நேரம் அந்தப் பிராமணத் துவேஷிகளை என்ன பாடுபடுத்தியிருப்பார்கள் தெரியுமா? நீங்களெல்லாம் கோழைகள், குருபக்தியற்றவர்கள்!" பரிதாபத்தில் தொடங்கி, கோபத்தில் முடித்தார் சோமநாத குருக்கள். அவர் பேச்சிலே அவமானமும் ஆத்திரமும் பொங்கிவழிந்தன!

இரங்கநாதஞ் செட்டியார் ஒன்றும் பேசவில்லை. ஆனால், பாலசுந்தரம் கூறினார்: "வீணாக ஊரிலிருப்பவர்களையும், காவலாளிகளையும் குறைசொல்லிப் பயனில்லை. ஊரே கேட்கிறது; "அந்த நேரத்தில் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் அங்கென்ன வேலை" என்று. நாங்கள் என்ன செய்வது? பிராமண விசுவாசம் வேண்டியதுதான், மறுக்கவில்லை. ஆனால் நேற்று மத்தியானம், ட்ரைவர் சையத் பாட்சாவும், உங்கள் தங்கை அலமேலுவும் பேசிக் கொண்டிருந்த நிலையைப் பார்த்ததுமே என் மனம் என்னமோ போலாகிவிட்டது. புழுத்த தண்மேல் காய்மலம்போல் நேர்ந்துவிட்ட இந்தச் சம்பவம், என்னை நாஸ்திகனாகவே மாற்றிவிடும் போலிருக்கிறது. அந்தப் பொடிப்பயல் செல்வனைத் தலை நிமிர்ந்து பார்க்கமுடியவில்லையே என்னால்! போதும் அவமானம்!" ஒரு தீர்க்கமான முடிவு தொனித்தது பாலசுந்தரத்தின் குரலில்.

பரிதாபத்தோடு செட்டியாரின் முகம் நோக்கினார் குருக்கள். அவர் கூறினார்: "கல்லவேளை, கும்பாபிஷேகம் தொடங்கினபிறகு இந்தக் கண்ணறாவி நடந்திருந்தால் பெரிய மானக்கேடு! இது பரவாயில்லை! கும்பாபிஷேகம், பூஜை, தீக்ஷை எல்லாம் பிறகு பார்த்துக்கொள்வோம். முதலில் அவளை ஊருக்கு அனுப்பிவையுங்கள்" காலப்போக்கின் நிர்ப்பந்தம் செட்டியாரின் பேச்சிலே பின்னிவிட்டது.

குருக்களின் முகத்திலே கரியைப் பூசின, இரங்கநாதஞ் செட்டியாரின் வார்த்தைகள். மனதிற்குள் கடும்புயல்! வேக்காடு! என்ன செய்வது? கும்பா

பிஷேக மனக்கோட்டை தபதபவென்று சரிந்து விழுந்தது! எழுந்து சென்றார் வீடுநோக்கி.

● ●

பூசையறையில், மூக்கில் முனகியவண்ணம் படுத்துக்கிடந்தார் குமரானந்த குருசுவாமிகள். அடிபட்டு வீங்கிய இடங்களுக்கு நெருப்பு ஒத்தணம் கொடுத்தார் சோமநாத குருக்கள். காயங்களுக்கு மருந்திட்டாள் குருக்களின் மனைவி. கோயில் திருவேலைக்காரியும், பூவாண்டியும் வாசற்படியிலே நின்றனர். குருசுவாமிகள் படும் வேதனை அவர்கள் மனதைக் கலக்கிற்று. ஊரிலே பேசப்படும் கேவலமும், தங்கள் தொழிலுக்கு ஏற்பட்ட இழுக்கும் நினைத்தபொழுது அவர்கள் நெஞ்சம் பற்றி எரிந்தது.

அதே நேரத்தில், குருக்கள்வீட்டுப் புறக்கடை மாட்டுக் கொட்டிலில், மனம் உடைந்துபோய் உட்கார்ந்திருந்தாள் அலமேலு. அவளைத் தேற்றிக் கொண்டிருந்தான் இளைஞன் சையத் பாட்சா.

"என்னால் குடும்பப் பெருமையே ஒழிந்தது. எங்காவது தொலைந்துபோ என்று அண்ணாவும் சொல்லிவிட்டார். அரைக்காசுக்குப் போனமானம் ஆயிரம் கொடுத்தாலும் வரவா போகிறது? இனி சாவது தவிற வேறு வழியில்லை" என்று சொல்லி அழுதாள் அலமேலு.

சையத் பாட்சாவின் மனம் இளகிக் கரைந்தது. மெதுவாக அவளது தோள்மேல் கைவைத்தான். அன்போடு கூறினான்: "அலமு! என்னை மன்னித்து

விடு. நீ என்னைப் புறக்கணித்த கோபமும், பாலசுந்தரத்தின் பேச்சைக் கேட்டுக்கொண்டு, செட்டியார் என்னை வேலையைவிட்டு நீக்கின கோபமும் சேர்ந்து என் அறிவைக் கெடுத்துவிட்டன. நேற்று பூசையறையில் நீயும் சுவாமிகளும் பேசிக்கொண்டதை சாப்பிடவந்த நான் கேட்டேன். பழிதீர்க்க வேண்டுமென்றே, நந்தவனக் காவலாளிகளுக்கு நல்ல போதையேற்றித் தூண்டிவிட்டேன். கண்கெடுமதி கேடாக அந்தப் பாவிகள் உன்னையும் சேர்த்துக் கட்டிப் போட்டுவிட்டார்கள் இரவு. சாவடியில் உன்னைப் பார்த்தபொழுது என் மனம் என்னபாடு பட்டது தெரியுமா? என் தவறை உணர்கிறேன். ஆனால் வருந்துவதில் பயனில்லை. நம்மிருவரது ஒட்டுறவின் காரணமாகவே எனக்கு வேலை போயிற்று; உனக்கு மானம் போயிற்று. இனி நாம் இந்த ஊரில் இருப்பானேன்? என்னோடு வந்துவிடு. எங்கு போனாலும் எனக்கு ட்ரைவர் வேலைக்குப் பஞ்சமில்லை. விதவை என்ற பேச்சு வேண்டாம். அலமேலுவை ஆயிஷாபீபியாக்கி நிக்காஹ் செய்து கொள்கிறேன். மறுக்காமல் ஒப்புக்கொள் அலமு, மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்." தான் கெட்டழிந்தவள் என்பதை அறிந்த பிறகும் அவன் காட்டும் அன்பும் ஆதரவும் அலமேலுவை திகைக்கவைத்தன. ஒரு புதிய தெளிவும், துணிவும் பிறந்தன அந்த இளம் விதவைக்கு.

சையத் பாட்சாவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். சரி என்றாள் அலமேலு. மகிழ்ந்தான் இளைஞன். "இரவு பனிரெண்டு மணிக்கு, குதிரைவண்டியோடு புறக்கடை வாசற்பக்கம் வருவேன். புறப்படத் தயாராக இரு" என்றான். அவன் கைகளைப் பற்றிக்

கொண்டு "மறந்துவிடாதீர்கள்" என்றாள் அலமேலு. அவள் இதயம் பொங்கிப் பூரித்தது. அவன் சென்றான்.

● ●

பாலசுந்தரம் தன் வீட்டில் இருந்தார். கோயில் பூவாண்டி வந்தான். சுவாமிகள் ஊருக்குப் போய் விட்டார் என்ற செய்தியோடு, அலமேலு சையத் பாட்சாவோடு ஓடிவிட்டாள் என்ற செய்தியும் கூறினான். "சரிதான்! நாயோடு போயிற்று நாய்ச்சட்டி! இப்படி நடக்குமென்று எனக்கு அப்பொழுதே தெரியுமே!" என்றார் பாலசுந்தரம்.


கையில் கத்தைத் துண்டுப் பிரசுரங்களோடு சேகரனும், செல்வனும் ஓடிவந்தனர். சேகரன் ஒன்றைக் கொடுத்தான் தந்தையிடம். அது புலிசை நகர் சுயமரியாதைச் சங்கத்தின் வெளியீடு.

"குலகுரு மகாத்மியம்" என்பது அதன் தலைப்பு! கடவுள், மத மூட நம்பிக்கைகளால் வரும் கேடுகளை யும், பழமையின் பெயரால் பகற்கொள்ளையடிக்கும் மடாதிபதிகள், ஆச்சாரியர்கள், லோககுரு, குலகுரு முதலானவர்களின் போலித்தன்மை, பொய் பித்த லாட்டங்களையும், தமிழர்களின் பகுத்தறிவற்ற இழிதன்மைகளையும் எடுத்துக்காட்டி வெகுநன்றாக விளக்கப்பட்டிருந்தன அந்தப் பிரசுரத்தில்.

பாலசுந்தரம் படித்தார். ஆனால், அன்று போல் அவர் சேகரனை முறைத்துப் பார்க்கவுமில்லை, கோபிக்கவுமில்லை. செல்வனை அருகில் அழைத்தார். "தம்பி! நீ கெட்டிக்காரன்!" என்று அவன் முதுகிலே தட்டிக்கொடுத்தார்.

சேகரன் கேட்டான்: "ஏப்பா! அவர் பெரிய மகான், நல்லொழுக்க போதகர் என்றெல்லாம் சொன்னீர்களே; என்னவாயிற்று? செல்வன் சொன்னதுதானே மெய்யாயிற்று?" என்று. செல்வன் அவனைச் சாடைகாட்டி யடக்கினான். பிறகு கூறினான்: "காணிக்கையோடு போகாமல், கும்பாபிஷேகம் செய்து பணத்தைச் சுரண்டிக்கொண்டு, சுயமரியாதைச் சங்கத்தையும் ஒழித்துவிட பார்த்தார். அவரது வினைப்பயனால் அவரே ஒழிந்தார்!"

"இதுதான் வினைப்பயன் என்பதோ? சபாஷ்டா பாண்டியா! இப்போதுதான் எனக்கும் புரிகிறது" என்றார் பாலசுந்தரம். அவரது முகத்திலே கிளர்ச்சியின் ரேகைகள் படர்ந்தன. "அப்பா! செல்வன் இனிமேல் என்னைக் கேலி செய்யமாட்டானப்பா!" என்று மகிழ்வோடு கூறினான் சேகரன். அவர் கூறினார்: "சேகர்! தெய்வீகம் என்றால் ஒழுக்கம்; ஒழுக்கம் என்றால் தெய்வீகம் என்று நம்பியிருந்தேன். இரண்டுக்கும் சம்பந்தமில்லையடா" என்று.



★★

# காதல் மணம்.

"முச்சந்தியிலே பூ விற்று வயிறு வளர்த்த பூக்காரி; கணவன் என்று சொல்ல எவனுமில்லாமல் கண்டவனுக்கெல்லாம் முந்தானையிட்ட விபசாரி. அந்தசெங்கம்மாளின் மகனை விடவா நான் கேவலம்? அப்பன் பெயரில்லாத அந்த முருகனை நம்பியா என்னை வெறுத்துவிடுவாள் சிங்காரி?" சுடச்சுடக் கேட்டான் சுந்தரத்திடம் பொதுவுடைமைவாதி பரந்தாமன். அவனது கண்கள் சிவந்துவிட்டன. கோபம் மட்டுமல்லாமல், இறுமாப்பும் எகத்தாளமும் துள்ளவிட்டன அந்தச் சொற்களிலே,

சுந்தரத்தின் இதயத்தில் சொரேலென்று தீ பற்றியது. ஆத்திரம் பொங்கிப் பிரவகித்தது. எனினும் அணைகோலி அடக்கினான். சுந்தரத்திற்குப் பரந்தாமனும் நண்பன்; முருகனும் நண்பன். "நகுதற் பொருட்டன்று நட்டல்" என்ற கருத்துடையவன்

சுந்தரம். பிருதிக்கன் எடுத்துரைக்கப் பின்வாங்க மாட்டான். எனினும் அடங்கினன். காரணம்: விஷயம் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது.

பரந்தாமன், மிராசுதார் மோகனரங்கத்தின் புதல்வன்; முருகன் பூக்காரி செங்கம்மாளின் மகன்; சுந்தரம் ஒரு நடுத்தர வணிகரின் மகன்; மூவரும் பள்ளித்தோழர்களாகப் பயின்று, வளர்ந்து, வாலிபம் எய்தியுள்ளவர்கள். மணம் நாடும் பருவத்தினர். எனினும் தகுதியிலும் தரத்திலும் மாறுபட்டவர்கள்.

பரந்தாமன் பிறந்த கோயம்புத்தூரிலேயே முருகனும் பிறந்தான். ஆனால் அவன் பிறந்தது உயர்ந்த மாளிகை; முருகன் பிறந்தது தாழ்ந்த மண் குடிசை! அவர்களது வளர்ப்புமுறையும்,வாழ்க்கை வசதிகளும் அவ்வாறுதாம் இருந்தன. அவர்கள் இருவரும் பள்ளியிலே நண்பர்கள் என்றாலும், அவர்களிடையே அடிக்கடி வேற்றுமைப் புயலடித்து நட்பு முறிபடுவதுண்டு. அன்பெனும் சிம்பு வைத்துக் கட்டி, மீண்டும் அதனைப் பிணைத்து விடுபவன் சுந்தரம்தான்.

ஆனல், இதுவரை வீசியடித்த புயலுக்கும், தற்போதைய புயலுக்கும் பெருத்த வேற்றுமையிருந்தது. அதனையறிந்து வேதனையுற்றான் சுந்தரம். அழகி சிங்காரியின் கடைக்கண் பார்வையிலும், கனிவுப் பேச்சிலும் கனன்றெழுந்த காதற்புயல், எக்கச்சக்கமாகச் சுழன்றடித்து, ஏழை முருகனை ஒடித்து விடக்கூடாதே என்று சுந்தரம் மனம் நடுங்கினன்.

சிங்காரி பகட்டுக்காரி; சிரிக்கும் கட்டழகி. தக்க இளம் பருவம். எவரையும் கவர்ந்திழுக்கும் எழில் நலம் பெற்றவள். எவரிடத்தும் சாதாரணமாகப்

பழகுவாள்; சரளமாகப் பேசுவாள். எனினும் தவ றான நடத்தையுள்ளவள் என்ற பழிச்சொல் அவளை நெருங்க அஞ்சிற்று. அவள் துராசைக்காரருக்குச் சுவாலை விட்டெரியும் செந்தழல்! அழகும் பதமும் உள்ள அரிவாள். அதனாலேயே மணாளனைத் தேர்ந் தெடுக்கும் உரிமையை துணிந்து மகளிடமே விட்டி ருந்தார் அவளது தந்தை செல்வநாயகம்.

சிங்காரி பரந்தாமனிடமும் பழகினாள், முருகனிட மும் பழகினாள்; சிரித்துச் சிரித்துப் பேசினாள். சிந் தையினைக் கவர்ந்தாள். இருவருமே அவளை விரும்பி னார்கள்; காதலித்தார்கள். என்றாலும் பரந்தாமன் காதலித்தது அவளது உடம்பை. முருகன் காதலித் தது உள்ளத்தை. அவரவர் வழியே காதலை வளர்த் தார்கள்—பெருக்கினார்கள்! வளர்ப்பு வேகம் முதிர்ந்து, போட்டியாகப் பரிணயித்துப் புயலாக எழுந்து நின்றது. இருவரும் மோதிக்கொள்ளுதல் கூடாதே என்று துடித்தான் சுந்தரம். நட்பு கலம் காணவிழைந்தான் அந்த உண்மை நண்பன்.

பரந்தாமனும், முருகனும் தன்னைக் காதலிப் பது சிங்காரிக்குத் தெரியும். அவர்கள் இருவரின் காதல் தன்மைகளும் அவளறிவாள். எனினும் வெளிப்படையாக எதுவும் கூறவில்லை நெஞ்சமுத் தக்காரி! அவளது எண்ணமறிய முயன்றான் சுந்தரம். பெருமுயற்சிக்குப்பிறகு அவளது கருத் தின் கடைக்கோடு விளங்கிற்று. பானைச் சோற் றுக்கு ஒரு சோறுபதம். புரிந்து கொண்டான் சுந் தரம். காதற் போராட்டத்தின் சமரசத் தூதுவனாகச் சென்றான் பரந்தாமனிடம். இதமாகக் கூறினான்: "உன் நெஞ்சத்தில் சிங்காரி இருக்கிறாள். சிங்காரி

யின் நெஞ்சத்தில் முருகன் இருக்கிறான். எனவே அவளை நீ மறந்துவிட்டு, வேறு ஒருத்தியை மணப்பது நல்லது'' என்று.

குலப் பெருமையும் பணச்செருக்கும் மூர்க்கமாக முறுகி எழுந்தன. ''முருகன் விபசாரியின் மகன், அப்பன் பெயரில்லாதவன் என்ற சொல்லம்புகள் சீறிக்கிளம்பின. சுந்தரம் சினந்தான். மறுகணம் சிந்தனையில் மூழ்கினான்; தலைகுனிந்தான். பூக்காரி செங்கம்மாளை வேசி என்று சொல்லிவிட முடியாது. என்றாலும் கணவனில்லாது வாழ்ந்தவள் என்பது நகரறிந்த ரகசியம்! பரந்தாமனின் அவதூறை மறுக்கவும் முடியாமல், ஒப்பவும் முடியாமல் திணறினான் சுந்தரம்.

தொங்கிய முகத்தோடு உட்கார்ந்திருந்த சுந்தரத்தின் முதுகில், வெற்றிக்களிப்போடு தட்டிக் கொடுத்தான் பரந்தாமன். ''உண்மை அவ்வளவு பயங்கரமாயிருக்கிறதே, நீ வருந்தி என்ன செய்வது'' என்றான் சாதுரியமாக. அது சுந்தரத்தின் மனப்புண்ணுக்கு மருந்தாகவில்லை. காஃபியருந்த வேண்டினான். மறுத்துவிட்டான் சுந்தரம். தனது பெருமைகள் குறித்துப் பலப்பல கூறினான்; ஏற்கவில்லை மெதுவாக எழுந்தான். ''பரந்தாமா! நீ இவ்வளவு கேவலமாக நடந்துகொள்வாயென்று எதிர்பார்க்கவில்லை. முற்போக்குப் பொதுவுடைமை பேசிப்பயனென்ன? பயங்கரமான உண்மைகளையும் பகுத்தறிவு பூர்வமாகக் கணித்து, மனிதப்பண்புக்கு வளம் தருவதாக மாற்றிக்கொள்ள முடியாத நீயா பொதுவுடைமைக்காரன்? ஒன்றேகுலம் ஒருவனே தேவன் என்ற பொதுமையறம் இகழ்ந்து, தேவை

யற்ற சாதிவெறியையும், பணச்செருக்கையும் பிர தானப் படுத்திவிட்டாய். இனி இது சம்மந்தமாக உன்னிடம் நான் வருவதில்லை—பேசப்போவதில்லை" என்று படபடப்பாகக் கூறினான் சுந்தரம். பரந்தா மனின் பதிலையும் எதிர்பாராமல் வெடுக்கென்று வெளியேறிச் சென்றான்.

புன்னகை புரிந்தவண்ணம் சோஃபாவில் சாய்ந் தான் பரந்தாமன். எண்ணங்கள் பல எக்களித்தன. சமையற்காரன் கொண்டுவந்த காஃபியை வாங்கிப் பருகினான். சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டு, காலின்மேல் காலைப்போட்டான். "காத லில் வெற்றிபெறுவது எப்படி?" என்ற நூலைப் பிரித்து, அதனுள் புதைத்தான் கண்ணையும் கருத் தையும்!

## 2.

கோவையிலே மோகனரங்கம் குறிப்பிடத்தக்க செல்வர். பெருத்த நிலபுலம் படைத்தவர். பங்களா, கார், வேலையாட்கள் சகிதம் ஆடம்பரமாக வாழுப வர். அவரது ஒரே புதல்வன் பரந்தாமன். எனவே செல்வச் செழிப்புக்கும், சுகபோக வாழ்வுக்கும் குறைச்சலே கிடையாது.

மோகனரங்கத்திற்கு வயது அறுபது இருக்கும். இதுவரை அரசியல் அலைகளிலே, சமுதாயப் பிரச் சனைகளிலே சிக்கிச் சுழன்றவரன்று. தன்னுடைய குடும்பத்தின் பொருளாதாரப் பெருக்கமே லட்சிய மாக வாழ்ந்தவர். ஆகவே பரந்தாமனின் பொது வாழ்வுப் பிரவேசத்தை அவர் விரும்பவில்லை. பரந் தாமன், கால மாறுபாட்டையும், நாகரிகத்தையும்

எதிர்க்க வலுவின்றி, பொழுதுபோக்குக்காகப் பொதுவுடைமை பேசுபவன். அறிஞர்கள் மார்க்ஸ், ஏங்கல்ஸ் தத்துவங்களைப் படித்துப் பாடமாக ஒப்பு விப்பான். பதைபதைக்கப் பேசுவான். அதனைக் கேட்டு மிரண்டுவிடுவார் பிரபு மோகனரங்கம்! எரிந்துவிழுவார் மகன்மீது. எனக்குப்பிறகு எப்படி ஆவாயோ என்று அடித்துப்போவார்!

பரந்தாமனின் தத்துவச் சவடால்களை தந்தை வெறுத்தாலும், ரசிப்பதிற்குச் சிலபேர் இருக்கத் தான் செய்தார்கள். அவனைப் போரன், வீரன் என்று புகழ்ந்தார்கள். எனவே, நாளுக்கு நாள் அவனது பேச்சுப் பெருகிற்று. அதேபோல் மோகனரங்கம் மகன்மீது கொண்ட வெறுப்பும் பெருகிவந்தது.

பரந்தாமனின் ஓராண்டுப் பருவத்திலே, அவன் தாய் அஞ்சலையம்மாளின் விருப்பப்படி குழந்தைக்கு ஆண்டுநிறைவு விழா நடைபெற்றது. பிறகு ஆண்டு தோறும் நடந்து வந்தது ஆடம்பர விசேஷங்களோடு. தன் ஒரே புதல்வனின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவு விழாவை முடித்துவிட்டு உலகை விட்டுப்பிரிந்தாள் அஞ்சலையம்மாள்.

மனைவியின் மட்டற்ற விருப்பத்திற்காகவும், மகனின் களிப்புக்காகவும் ஆண்டுதோறும் விழாவினைச் சிறப்பாக நடத்திவந்தார் மோகனரங்கம்.

அன்று, பரந்தாமனின் இருபதாம் ஆண்டு நிறைவு விழா. வழக்கம்போல் ஆலயத்தில் அர்ச்சனை அபிஷேகம், மேளதாளம், பந்தல் பரிவட்டம், விருந்து, வேடிக்கை,. யாவும் சிறப்பாக நிகழ்ந்தன. நண்பர்

களின் வாழ்த்தும், தெய்வப் புரோகிதரின் ஆசீர்வாதமும் குறைவறக் கிடைத்தன. பூரித்துப்போனான் முற்போக்காளனாகிய பரந்தாமன்!

விழா ஓய்ந்து, எல்லோரும் வீடு திரும்பினர். இறுதியாகப் புறப்பட்டனர் சிங்காரியும், தந்தை செல்வநாயகமும். இரவு தங்கி உணவுக்குப்பின் செல்லுமாறு அவர்களை வேண்டினான் பரந்தாமன். செல்வநாயகத்தின் இனிய சுபாவம் மோகனரங்கத்திற்குப் பிடித்திருந்தமையால், அவரும் விரும்பினார் அவர்கள் தங்குவதை. ஒப்பினர் தந்தையும் மகளும்.

இரவு மணி எட்டு. உணவு முடிந்தது. பாத்திரம் பண்டங்களை வேலைக்காரர்கள் ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தனர். சிங்காரக் கூடத்தில் சோஃபாக்களிலே நால்வரும் அமர்ந்தனர். வெள்ளித் தட்டில் வெற்றிலைப்பாக்கு வந்தது. எங்கும் நறுமணம் கமழ்ந்தது. மின்சார விசிறியை முடுக்கிவிட்டு, ரேடியோவைத் திருகினான் பரந்தாமன். தமிழ் நாடகமொன்று நடந்துகொண்டிருந்தது. இந்திப் பாட்டுக்களை விரும்பி, பம்பாய் நிலையத்திற்கு முள்ளை நகர்த்தினான். "ஏன்? தமிழ் நாடகம் பிடிக்கவில்லையா?" வெடுக்கென்று கேட்டாள் சிங்காரி. "ஓ! மறந்துவிட்டேன். உனக்கு நாடகமென்றால் மிகுந்த பிரியமாயிற்றே" என்று திருச்சியைத் திறந்தான் பரந்தாமன்.

"உங்களுக்கு நாடகம் பிடிக்காதோ?" சிங்காரி கேட்டாள். 'உனக்குப் பிடித்ததெல்லாம் எனக்கும் பிடிக்குமே" என்றான் உற்சாகத்தோடு. சிரித்துக் கொண்டனர் பெரியவர்கள்.

"காதல் மணம்" என்ற சிறுநாடகம் நடந்தது! சற்றுச் சுவையாக இருந்ததால் எல்லோருமே

கேட்டனர். அழகிற்சிறந்த ஒரு செல்வக்குடிப்பெண். அவளை இரு வாலிபர்கள் காதலித்தனர். ஒருவன் செல்வன்; மற்றவன் ஏழை. அந்தப் பெண்ணின் பிறப்பைப் பற்றிய ஒரு களங்கம் வெளிப்படுகிறது. செல்வன் அவளை வெறுக்கிறான். ஏழை, மனைவியாக ஏற்கிறான். இது கதையின் சாரம். நாடகம் முடிந்ததும் அதுபற்றிய சர்ச்சையொன்று முளைத்தது. செல்வன் செய்ததே சரியென்றான் பரந்தாமன். அவனது காதல் உண்மையானதல்லவென்று குறை கூறினான் சிங்காரி. காதலித்த பெண்ணை குலம் கோத்திரம் காரணமாகக் கைவிடுவது என்பது பகுத்தறிவற்ற மிருகத்தனம் என்று சினந்து பேசினார் செல்வநாயகம்.

பரந்தாமன் கேட்டான்: "பரம்பரையான தன் குடும்பப் பெருமையைக் காப்பாற்றிக் கொள்வது குற்றமா?"

"குடும்பத்தின் போலிப் பெருமைக்காக நம்பிய ஒருபெண்ணின் வாழ்வை நாசமாக்குவது நியாயமா?" செல்வநாயகம் கேட்டார்.

இந்த வாக்குவாதம் வலுக்க வலுக்க, ஏனோ மோகனரங்கத்தின் வதனம் கறுத்தது. நெஞ்சத்து வேதனை நெற்றியிலே சுழிந்தது. எனவே அவர்கள் பேச்சுக்கிடையிலே அமர்த்தலாகக் கூறினார்: "பரந்தாமா! உன் கருத்து, ஒரு தலைச் சார்பானது. செல்வநாயகம் சொல்வதுதான் சரி!"

"அப்பா! நீங்களா இப்படிச் சொல்லுகிறீர்கள்?" அவன் கேட்டான்.

"ஆமாம். நான்தானடா சொல்லுகிறேன். மனிதத்தன்மைக்கு முதன்மையளிப்பவர்கள் இந்த முடிவுக்குத்தான் வருவார்கள்!"

"அப்பா! ஒன்று கேட்கிறேன், சொல்லுங்கள். இப்பொழுது சிங்காரியை நானும் விரும்புகிறேன். முருகனும் விரும்புகிறான். முருகன் அப்பன் பெயரில்லாத வேசி மகன், ஈனப்பிறவி என்பது இவர்களுக்குத்தெரிந்துவிட்டால் பிறகு சிங்காரி என்னைத் தானே மணக்கவேண்டும்?"

"சிங்காரி முருகன்மேல் கொண்ட காதல் மெய்யானால் அவனைத்தான் மணக்கவேண்டும்." அழுத்தமாகக் கூறினார் மோகனரங்கம்! பதறிப்போய் விட்டான் பரந்தாமன். "அப்பா! உங்கள் மகனுக்கா ஓரவஞ்சனை செய்வீர்கள்" என்று கேட்டான் கடுமையாக. கேள்விக்கணை சுருக்கென்று தாக்கிற்று அவரது நெஞ்சை. 'ஓரவஞ்சனை' என்ற சொல் பயங்கர உருவெடுத்தது. தேகமெங்கும் ஒரு நடுக்கம் பரவிற்று. சிந்தனைசுழல தலைகவிழ்ந்தார். "ஆம்! என் மகனுக்கு ஓரவஞ்சனை செய்யக்கூடாது தான்!" மெதுவாகக் முணுமுணுத்தார் மோகனரங்கம். பிறகு எழுந்தார். "நல்லது நீங்கள் பேசிக்கொண்டிருங்கள்" என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்.

"நேரமாகிவிட்டது, நாங்களும் வருகிறோமே" என்று பகர்ந்தவண்ணம் எழுந்தார் செல்வநாயகம். சிங்காரியும் எழுந்து விட்டாள். தந்தையும், மகளும் புறப்படச் சித்தமாய்விட்டனர்.

பரந்தாமன் எழுந்தான் ஏமாற்றத்தோடு. அசடும், ஆசையும் படர்ந்தன அவன் முகத்தில்! "விவாதம் அரைகுறையாக நின்றுவிட்டதே! முடிவு எனக்குச் சாதகமாக இருக்குமா?" சிங்காரியைப் பார்த்தவண்ணம் புன்னகையோடு வினவினான்.

அவனது எண்ணமறிந்த ஏந்திழை சுருக்கமாகக் கூறினாள்: "என் தந்தையும், உங்கள் தந்தையும் மிகுந்த உலக அனுபவமுள்ளவர்கள்; முடிவை அவர்களே செய்யட்டும்" என்று. உதட்டைக் கடித்துக் கொண்டான் பரந்தாமன். பிறகு விடைபெற்றுச் சென்றனர் சிங்காரியும், செல்வநாயகமும்.

## 3.

மனித இனத்திற்கு மட்டுமன்று, எவ்வகை உயிரினங்களுக்கும் தாய்மை பெருமைக்குரிய ஒரு பண்பு, உயிர்களின் ஊற்றுக்கண், கருணையின் கனிவு, தியாகத்தின் சின்னம். "ஒருமடமாதும், ஒருவனுமாகி அன்பு கலந்து" உற்பவிக்கும் கருவினைக் காத்து, குழவியாகப் பெற்றுவளர்க்கும் மாதா ஒரு மகத்தான பாசப்பெட்டகம்; அன்பின் மாளிகையன்றோ! தாய்மையின் பண்புகளையும், அவற்றைத் தாங்கும் தாயின் பெருமைகளையும் நன்கறிந்தவன் முருகன். எனவே தன் தகப்பன் யாரெனத் தெரியவில்லை என்றாலும், அதற்காக அவன் தாயை இகழவில்லை; துணியவில்லை பயனறிந்த அவன் தூயஉள்ளம்.

செங்கம்மாள் இறந்து மூன்றாண்டுகள் கடந்து விட்டன. அன்று அவள் இறந்தநாள். தனது சிறிய இல்லில், தனக்கு முன்னால் கிடந்த மேசைக்கு மேலே சுவரில் மாட்டியிருந்த தாயின் படத்திற்கு முருகன் பணிவன்போடு மலர்மாலையிட்டான். நாற்காலியில் உட்கார்ந்து, அமைதியாக அன்னையின் படத்தை உற்று நோக்கினான்; சிந்தனை சுழன்றது.

தனக்கு அறிவும், நினைவும் வந்தநாள் முதல் தன்னிடம் காட்டிய தாயன்பு; தன் உணவுக்கும்,

உடைக்கும், படிப்புக்குமாக அவள்பட்ட சிரமம், பூவாணியத்தில் காட்டிய ஊக்கம் உழைப்பு, இவற்றிற்கிடையே ஊரார் அவள்மீது வீசியெறிந்த பழிச் சொற்கள், நெஞ்சம் குமைந்து அவள் சிந்திய கண்ணீர் யாவும் முருகனின் மனத்திரையிலே நிழற் படமாக ஓடின. அசைவற்று, சிலையாகச் சமைந்திருந்த அவனது கருணைக்கண்களிலே கதகதப்பான கண்ணீர்த்துளிகள் பொங்கியெழுந்து, கன்னங்களிலே உருண்டன.

சுந்தரம் வந்தான். தன் நண்பனின் நிலைகண்டு வியப்படைந்தான். முருகனின் எதிரேயிருந்த அவன் தாயின் படத்திற்குப் பூமாலையணிந்திருப்பது கண்டான். 'செங்கம்மாள் இறந்து மூன்றாண்டுகள்' என்பது அவன் நினைவுக்கு வந்தது. தாயிடம் அந்தப் பகுத்தறிவாளன் காட்டும் பேரன்புகண்டு சுந்தரம், மனம் குழைந்து பூரித்துப்போனான்.

"முருகா! ஊரார் உன்னை நாத்திகன் என்கிறார்கள். மிகத்தவறு. முன்னறிந்த தெய்வங்களை இதய பூர்வமாக வணங்குவதில் உன்னருகே நிற்கவும் அவர்களுக்கு யோக்யதையில்லை" என்றான் சுந்தரம்.

திடுக்கிட்டான் முருகன். நினைவு குலைந்துத் திரும்பிப்பார்த்தான். முறுவல்காட்டி வரவேற்றான் நண்பன் சுந்தரத்தை. ஒடிந்த நாற்காலியொன்றில் அமர்த்தினான்.

முருகன் கூறினான்: "சுந்தரம்! அன்னையும் பிதாவும முன்னறி தெய்வங்கள். ஆனால், அந்த முன்னையதிலும் முதல் தெய்வந்தான் நானறிந்தது!" அவனது கண்கள் கலங்கின.

நெஞ்சத்தின் அடித்தளத்தினின்றும் வெடித்தெழுந்த அந்தச் சொற்களிலே இழைந்த பாசம், சுந்தரத்தை இளக்கவைத்தது. அன்றொருநாள் முருகனை இழித்துரைத்த பரந்தாமனின் சொற்கள் நினைவுக்கு வந்தன.

இத்தகைய பண்பாளரை நிந்தனைக்கு ஆளாவது என்று நினைத்தபொழுது, அவன் நெஞ்சு நெகிழ்ந்தது. முருகனைப் பலவாறு தேற்றினான். அவனது எதிர்கால வாழ்வுத் திட்டமும், தனது கருத்தும் பற்றிப் பலபல கூறினான் சுந்தரம். அவனது ஆலோசனைகளை முருகன் வரவேற்றான். திருமணப் பிரச்சினை எழுந்தது எதிர்பார்த்தபடி.

"சிங்காரி எப்படியும் என்னை மணப்பது நிச்சயம்" என்றான் முருகன்.

"அதுபற்றித்தான் சிறிது கவலைப்படுகிறேன். பரந்தாமன் மேட்டுக் குடியினன். பணபலம் படைத்தவன். சிங்காரி உளமார உன்னைக் காதலிக்கிறாளென்றாலும், அவள் தந்தை செல்வநாயகத்தின் எண்ணம் பொருளாதார வளத்தின்மேல் படர்ந்துவிட்டால்......?" சுந்தரம் வினவினான்.

"சிங்காரியின் விருப்பத்திற்கு விரோதமாக அவர் நடக்கமாட்டார். சென்றவாரம் பரந்தாமனின் ஆண்டுநிறைவு விழாவின்போது நடந்த செய்தி தெரியுமா?" என்று கேட்டான் முருகன்.

"என்ன? நாமும்தானே போயிருந்தோம்?" என்றான் சுந்தரம்.

"நாமெல்லாம் வந்தபிறகு, செல்வநாயகத்தை யும், சிங்காரியையும் இரவு தங்கியிருந்து சாப்பிட்டுச் செல்லவேண்டினராம். இவர்களும் ஒப்பினார்களாம்."

"காக்கா பிடிக்க சரியான திட்டம்!"

"பிடிக்க முயன்றது காக்கா, கிடைத்தது கழுகாம்!"

"அப்படி என்ன நடந்தது?"

பிறகு, சிங்காரியைச் சந்தித்ததாகவும், அன்று இரவு பரந்தாமன் வீட்டில் தங்கியபோது ரேடியோ வில் நடைபெற்ற "காதல் மணம்" நாடகம், அது பற்றிய விவாதம் யாவும் கூறினான் என்று, நடந்த நிகழ்ச்சியை விளக்கினான் முருகன். ரசித்தான் சுந்தரம். "எப்படியாவது உன் எண்ணம் முடிந்தால் போதும்" என்றான்.

அப்பொழுது அவசரமாக ஓடிவந்தான் சுந்த ரத்தின் தம்பி. "என்னடா இப்படி...?" என்று கேட்டான் சுந்தரம். அவன் கூறிய செய்தி, அவர் கள் இருவரையும் திடுக்கிடவைத்தது. திகைத்துக் கல்லாகச் சமைந்து விட்டனர்.

சென்றவாரம் தன் அருமந்த புதல்வனின் ஆண்டுநிறைவினை ஆடம்பரமாகக் கொண்டாடிய செல்வர் மோகனரங்கம், இந்தவாரம் திடீரென மாரடைப்பால்மண்ணுலகைவிட்டுப்பிரிந்தாரென்றால் யாருக்குத்தான் மலைப்பும், திகைப்பும் ஏற்படாது?

## 4.

தந்தையின் ஈமக்கிரியைகளை, வைதிக முறைப் படி குறைவின்றி செய்து முடித்தான் பரந்தாமன்

அவரது மோட்சப் பயணம் இடுக்கணின்றி நிகழ, பசு, பாதக்குறடு, படுக்கை, குடை யாவும் தாராள மாகப் புரோகிதர்க்கு வழங்கினான். நண்பர்கள் வியந்தனர். "எந்தக் கொள்கை பேசினாலும், தம்பி ஆசாரம் தவறவில்லை. இதுதான் குடும்பத்திற்குப் பெருமை" என்று போற்றினர் சுற்றத்தார்.

காரியங்கள் முடிந்தன. தந்தையின் இறப்பு பற்றிப் பரந்தாமன் சிறிது வருந்தினான். எனினும், தனக்கே தனியுடைமையாகிவிட்ட நிலபுலன், பங்களா, கார், நகைநட்டு, செக்புத்தகம், கரன்சி கத்தைகள் யாவும் அவனது சிந்தையை மலர வைத்தன. தெம்பும் துணிவும் நல்கின.

செல்வநாயகத்தையும், சிங்காரியையும் அடிக்கடி காரையனுப்பி வரவழைத்தான். விருந்து வைத்தான்; வேடிக்கையாகப் பேசினான். அடிக்கடி அவர்கள் வீடு செல்லவும் தொடங்கினான். அவர்கள் சலிக்கும் அளவிற்கு அன்பை வாரிக் கொட்டினான்.

"பரந்தாமனின் ஆடம்பரத்தில் சிங்காரி சொக்கிப் போய்விடுவாள், அவள் அவனுக்குத்தான்" என்றனர் ஊரார். சுந்தரமும் மனம் சோர்ந்தான். ஆனால், முருகன் மட்டும் குன்றுபோல் குலையா மனத்தினனாயிருந்தான்!

அன்று காலை ஒன்பது மணியிருக்கும். காலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு, சோபாவில் சாய்ந்தான் பரந்தாமன்.

அவனது குடும்ப வக்கில் கோகுல கிருஷ்ணனும், நண்பன் சுந்தரமும் வந்தனர். ஆர்வத்தோடு அவர்களை வரவேற்றான். உபசரித்து அமர்த்தினான்.

"சுந்தரம்! உனக்கொரு நல்ல செய்தி. கடைசியாக சிங்காரி என்னை மணக்க ஒப்புக்கொண்டு விட்டாள். இன்று வந்து தனது முடிவைத் தெரிவிப்பாள். உனக்கு மகிழ்ச்சிதானே?" உற்சாகம், பெருமிதம், பூரிப்பு யாவும் பொங்கித்ததும்ப இவ்வாறு வினவினான் பரந்தாமன்.

"மன்னிக்கவேண்டும். திருமணவிஷயமாக நான் உன்னிடம் வரப்போவதில்லை, பேசப் போவதில்லையென்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேனே; அந்த முடிவிலிருந்து நான் மாறப்போவதில்லை" என்றான் சுந்தரம்.

சுந்தரத்தின் பதில், பரந்தாமனை அலட்சியப்படுத்துவது போலிருந்தது. "அப்படியானால் இப்போது வந்தது...?" மனத்தாங்கலோடு கேட்டான் பரந்தாமன்.

"ஒருமுக்கிய விஷயம் கூறவேண்டும். நண்பனென்ற முறையில் நீ அருகிலிருக்க வேண்டுமென்று அழைத்தார் வழக்கறிஞர்." என்றான் சுந்தரம்.

"முக்கிய விஷயமா? என்ன ஐயா அப்படிப்பட்ட விஷயம்?" சற்று காரமாகவே கேட்டான் பரந்தாமன்.

அதனைப் பொருட்படுத்தவில்லை வழக்கறிஞர். "இறப்பதற்கு நான்கு நாட்களுக்குமுன்பு, உங்கள் தந்தை ஒரு உயில் எழுதிப் பதிவு செய்தார். அவரது மரணத்திற்குப் பிறகு, அந்த உயிலின்படி நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு என்னைச் சார்கிறது. அதனைத் தங்களிடம் தெரிவிக்கவே வந்தேன்" என்றார் கோகுலகிருஷ்ணன்.

"உயிலா? என்ன உயில்? எங்கே அது?" பரந்தாமன் கேட்டான்.

"இதோ அதன் நகல்" என்று கூறி, தன் பாக்கெட்டிலிருந்து எடுத்துக் கொடுத்தார் இரு காகிதங்களை. அலட்சியமாக அதனை வாங்கிப் படிக்கத் தொடங்கினான் பரந்தாமன். படிக்கப் படிக்க, துவக்கத்திலிருந்த முகமலர்ச்சி படிப்படியே தேய்ந்து மறைந்தது; அங்கே இருள் குடியேறத்தொடங்கிற்று.

அந்த உயிலின் சுருக்கம் இது:

எனது வாழ்க்கை எவ்வளவு பெருமைக்குரியதோ, அவ்வளவு சிறுமைக்குரியது இதன் அடிப்படை. இளம்பருவத்தில் நானும் செங்கம்மாளும் காதலித்தோம். நானும் ஏழை; அவளும் ஏழை. எனினும், சாதிவெறி நாங்கள் மணந்து வாழத் தடைச்சுவராய் நின்றது. எனவே இரகசியத்தில் காதல் மணம் புரிந்துகொண்டோம். அனைவராலும் கைவிடப்பட்டு வறுமைச் சேற்றிலே வதையுற்றோம். அஞ்சலை அழகுள்ளவள். பெருஞ்செல்வரின் புதல்வி. அவளை மணந்து வாழ எனக்கு அழைப்பு வந்தது. ரூபா பத்தாயிரம் ரொக்க வரதட்சிணை! நிர்ப்பந்தப் படுத்தப்பட்டேன். நிலை தவறினேன். பொருள் என் உறுதியைக் குலைத்தது. செங்கம்மாளைக் கைவிட்டு, அஞ்சலையை மணந்தேன். திருமணம் முடிந்து நான்காம் மாதத்தில், அஞ்சலை ஒருகுழந்தைக்குத் தாயானாள்; நான் தேள் கடியுண்ட திருடனானேன். அவள் செய்த விபசாரத்தை மறைக்க, அந்த செல்வக் குடியின் மானத்தைக் காக்க, எனது காதல் வாழ்க்கை பலியாக்கப்பட்டு விட்டது. கருவுற்றிருந்த செங்கம்மாள் இழிவைச் சுமந்து தெருவிலே பூ விற்றுப் பிழைத்தாள். இழி செயல் புரிந்த அஞ்சலை எனது இல்லத்தரசியாக வாழ்ந்தாள். நெஞ்சு நெருப்பாக எரிந்தாலும், பணம் என் வாயைக் கட்டிவிட்டது. பொருள் பெருக்கினேன். நிலபுலம், பங்களா, பணியாட்கள், கார், கண்ணியம் எல்லாம் குவிந்தன. எனினும் என் மனதில் சாந்தியில்லை. அஞ்சலையின் மகன் பரந்தாமன்

மாளிகையிலும், என் மகன் முருகன் குடிசையிலும் வளர்ந்தனர். அவர்கள் பள்ளி நண்பர்களாயினர்; ஒரே பெண்ணைக் காதலித்தனர். அவர்களின் காதல் போராட்டம் என் கண்களைத் திறந்து, நல்வழி காட்டிற்று. காதல் மணம் பற்றிய ஒரு விவாதம்; முருகன் அப்பன் பெயரில்லாதவன், ஈனப்பிறவி என்ற பழிச்சொல், அதே நேரத்தில் அப்பன் யாரென்று தெரியாத பரந்தாமனின் செருக்கு யாவும் சேர்ந்து, மறைந்துகிடந்த என் நெஞ்சக நெருப்பை ஊதி விட்டுக்கனன்றெழச்செய்துவிட்டன. என் மனசாட்சி என்னைச் சித்திரவதை செய்தது; எனவேதான் நான் இந்த முடிவுக்கு வந்தேன். இதன் மூலம் நான் செய்த மன்னிக்க முடியாத தவறுகளுக்கும், ஒரவஞ்சனைகளுக்கும் கழுவாய் தேடிக்கொள்ளுகிறேன். நான் என் மணத்திற்கு விலையாகப்பெற்ற ரூபா பத்தாயிரத்தை அப்பன் பெயரில்லாத பரந்தாமன் அடையட்டும். மற்ற எனது சொத்துக்கள் யாவற்றை என் மகன் முருகன் அடையட்டும். என் மரணத்திற்குப் பிறகு இதனைச் செய்துமுடிக்கும் அதிகாரம் எனது நம்பிக்கைக்குரிய வழக்கறிஞர் கோகுலகிருஷ்ணனுக்குரியது. உலகம் என்னை மன்னிக்குமாக.

இங்ஙனம்,

மோகனரங்கம்.

படித்து முடித்ததும் பிணம்போல் தோன்றினன் பரந்தாமன். அவனது ஐம்புலன்களும் நிலைகுலைந்து மறத்துப்போய்விட்டன. அதிர்ச்சி தாங்க முடியாமல் அறிவழிந்து, கண்களை மூடியவண்ணம் சாய்ந்தான் சோபாவில். சமையல்காரனிடம் அவசரமாகக் காஃபி கொண்டுவரச் சொன்னான் சுந்தரம்.

பரந்தாமன் எதிர்பார்த்தபடி சிங்காரியும், செல்வநாயகமும் வந்தனர். நிலைமை கண்டு திகைத்தனர். காரணம் கேட்டனர். விளக்கம்கூற முயன்று முடியாமல் மலைத்தான் சுந்தரம். திருமண விவகாரத்தில் தலையிடக் கூடாதன்றோ? காஃபி வந்தது

மெதுவாகக் கண்களைத் திறந்தான் பரந்தாமன், காஃபியருந்திக் களைப்பினின்றும் தேறினான். சிங்காரியின் முகம்நோக்கினான்; சிந்தையில் ஒரே குழப்பம். அதனிடையே புதியதோர் துணிவு பிறந்தது. அவன் கூறினான்:

"சிங்காரி! மறைப்பதில் பயனில்லை. நானாகவே சொல்லிவிடுகிறேன். என் அப்பாவின் மகன் முருகன். அப்பன் பெயரில்லாத ஈனப்பிறவி நான். இதோ, மோகனரங்கம் எழுதிவைத்த உயில் அதைத் தெளிவு படுத்திவிட்டது. முருகனையா, என்னையா; இனி நீ யாரை மணந்து கொள்ளப் போகிறாய்?"

சற்றும் எதிர்பாராத இச்செய்தி, சிங்காரியையும், செல்வநாயகத்தையும் வியப்புக் கடலில் மூழ்கடித்தது. உணர்ச்சி அலைகளால் மோதுண்டு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

பரந்தாமனின் கேள்விக்கு பதில் கூறினாள் சிங்காரி: "போலிப் பொதுவுடைமை வாதிக்கும், உண்மைப் பகுத்தறிவு வாதிக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை, அடிநாள் முதல் கவனித்து வருபவள் நான். எனவே முருகனை நான் மணப்பதென்பது ஏற்கனவே முடிவுசெய்யப்பட்ட விஷயம். நாங்கள் காதல் மணம் புரிந்து கொள்வதை நீங்கள் மனப்பூர்வமாக வரவேற்கவேண்டும்."

"வேறு என்னதான் செய்யப்போகிறேன்!" என்றான் பரந்தாமன் வேதனையோடு.



★★

# பிச்சைக்காரி.

"சாமி! சாப்பாடு கண்டு மூணு நாளாச்சு, கொஞ்சம் தயவு பண்ணுங்களே மகராஜா!" என்று கெஞ்சினான் அந்தப் பிச்சைக்காரி. ஐயருக்கு அசாத்திய கோபம் வந்துவிட்டது. கண்கள் சிவந்தன.

"சீ! கழுதை! நான் சொல்றது காதில் விழறதா பார்; சிரார்த்தம் செய்யும் நாளில், உங்களுக்கு எந்த மடையன் சாதம் போடுவான்? ஆச்சாரமில்லே? சாஸ்திரமில்லே? ஒனக்காக பிராம்மண தர்மத்தையே விட்டிடவா? பிரஷ்டே! வயித்துக்கில்லாட்டா ஒரு குளம் குட்டைகூடவா கெடைக்கலே, விழுந்து சாக! பிச்சைக்கார சனியன்கள்!" என்று சொல்லிக் கதவைத் தடாரென்று சாத்திக்கொண்டு, உள்ளே சென்றுவிட்டார் அந்த பிராம்மணோத்தமர்.

அவள் வதனத்திலே கொஞ்சநஞ்சம் ஊசலாடிக் கொண்டிருந்த நம்பிக்கையும் மறைந்தது. கண்களின்

ஒளி மங்கியது. பெருத்த ஏமாற்றத்துடன் பெருமூச்சு விட்டாள்; மெதுவாகப் பின்னால் நகர்ந்தாள். தள்ளாடிக்கொண்டு கீழே விழப்போனவள், சுதாரித்துக்கொண்டு நின்றாள். பாவம்! அவள் என்ன நினைத்தாளோ? பரிதாபகரமாக வானத்தை அண்ணாந்து நோக்கினாள். அவளது கண்களிலிருந்து இரண்டு நீர்த்தாரைகள் புறப்பட்டு, அவளது ஒட்டிய கன்னங்களிலே வழிந்தன.

தெருவோடு போய்க்கொண்டிருந்த நான், இவைகளைக் கவனிக்க நேர்ந்தது. என் மனதை வாள்கொண்டு அறுப்பதுபோலிருந்தது அந்தக் காட்சி. அசைவற்று நின்றேன். பல பல யோசித்தேன். இறுதியாக அவளை என் பின்னால் வரும்படிச் சொல்லிவிட்டு, அடுத்த தெருவிலிருக்கும் எனது வீட்டை நோக்கி நடந்தேன். அவள் பின்தொடர்ந்தாள். என் மனைவியின் நல்ல குணம், அந்தப் பிச்சைக்காரியிடம் நான் கொண்ட இரக்கத்திற்கு இடையூறு செய்யவில்லை. அன்பை வளரவே செய்தது.

அவளுக்கு வயது இருபத்தைந்துதானிருக்கும். அழகு முகம், ஒல்லியான தேகம், கந்தல் துணிகளால் அந்தச் செவ்விய உடம்பை மறைத்துக் கொண்டிருந்தாள். முழங்கால் வரையில்; ஏன்? தேகமெங்குமே புழுதி படிந்துபோயிருந்தது. எண்ணெயின் நிழலையும் காணமல் அவள் கூந்தல், பனைநார்போல் சிலிர்த்துப்புரண்டுகிடந்தது. பொதுவில், அவள் ஒரு பிச்சைக்காரிக்குரிய சகல அம்சங்களையும் பெற்று, விகாரத் தோற்றத்தையளித்துக் கொண்டிருந்தாள். ஆனால், அவள் உண்மையில் விகார ரூபியா? அதுதான் கிடையாது.

என் வீட்டுக்கு வந்தபிறகு அவள் நிலைமை சற்று மாறியது என்னுடையவும், என் மனைவியுடையவும் விருப்பத்திற்கு இசைந்து, அவள் குளித்துக் கொண்டாள்; தலையில் எண்ணெய் தடவி வாரிக் கொண்டாள். கந்தல் அகற்றப்பட்டு, என் மனைவியின் ஒரு பழைய சேலை அவள் உடம்பை மூடிற்று. திருப்தியுடன் ஆகாரம் அருந்தினள். இப்போது அவள் தோற்றமே அடியோடு மாறிவிட்டது. அவளைப் பார்ப்பவர்கள் பிச்சைக்காரி என்று சொல்ல முடியாது.

எங்கள் அன்பை அவள் பெற்றுவிட்டாளென்றாலும், ஏனோ மிகவும் நாணமடைந்தாள். "இந்தப் பிச்சைக்கார நாய்க்கு இத்தனை உபசாரமா?" என்று அவளே சொல்லிக்கொண்டாள். அவள் முகத்திலே துயரமும், மகிழ்ச்சியும் தோன்றித் தோன்றி மறைந்தன. என்ன விசித்திரப் பிறவியோ!

அவள் என் வீட்டிற்கு வந்து எட்டு நாட்களாய் விட்டன. எடுபிடி வேலைகளைச் செய்துகொண்டு எங்கள் நிர்ப்பந்தத்திற்கு இசைந்து, வீட்டில் தங்கியிருக்கிறாள். ஏனோ, அவள் வரலாற்றைக் கேட்டறிய வேண்டுமென்ற ஆசை என் மனதைக் கிள்ளியது. அவளது வாழ்க்கையிலே ஏதேனும் விநோதமான அனுபவங்களிருக்க வேண்டுமென்பது எனது எண்ணம். அந்தஎண்ணத்தை உறுதிப்படுத்தின அவளது கௌரவமான பேச்சும், பண்பட்டநடவடிக்கைகளும்.

* * *

அன்று இரவு. முற்றத்தில் ஒரு கட்டிலின் மீது நான் சாய்ந்து கொண்டிருந்தேன். என் மனைவி வீட்டு வேலைகளை கவனித்துக்கொண்டிருந்தாள்

வானத்திலே சந்திரன் வெண் கதிர்களைத் தூவிய வண்ணம் பவனி வந்தான். என் எதிரே, சற்று தூரத்திலே அவள் வந்து உட்கார்ந்தாள். எண்ணத்தை வெளியிட்டேன். முதலில் என் விருப்பத்துக்கு இசையவில்லை ஆயினும் பின்னால் என்னை நினைத்தாளோ; அவள் தன் கதையைக் கூறத் தொடங்கினாள். நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்து நான் கேட்டேன்.

"என் கதை பரிதாபகரமானது என்பதை, நானிருந்த நிலையைக்கொண்டே நீங்கள் உணர்ந்திருக்கலாம். நான் பிச்சைக்காரியாகிய இந்த மூன்று ஆண்டுகளிலே, களங்கமற்று, மனிதாபிமானத்தோடு என்னை ஆதரித்தவர்களில் நீங்களும், உங்கள் மனைவியாருந்தான் முதல்வர்கள்! ஆகவே, உங்களிடம் நான் எதையும் மறைக்கமாட்டேன். மறைக்காமல் கூறுவதற்காக மன்னிக்கவேண்டும்.

பரமத்தி என்ற ஊரிலே நான் பிறந்தேன் அது ஒரு பேரூர். பரமத்திக்குள் எங்கள் குடும்பம் பெரிது, மிகுதியான செல்வமும், செல்வாக்கும் படைத்தது. என்னுடன் பிறந்த பெண்கள் இருவர்; ஆண்கள் மூவர், எல்லோருக்கும் நான்தான் மூத்தவள். என் பெற்றோர்கள் பழங்காலத்து மனிதர்கள். அவர்களுக்கு மதம் என்பது என்னவென்று தெரியாது. சாஸ்திர புராணங்களைப் படித்ததில்லை. ஆனால் பழமையான பழக்க வழக்கங்களிலும், சாதி, குலப் பெருமையிலும் பிடிவாதமுள்ளவர்கள். நான் இந்த நிலைக்கு வந்ததிலே, அவர்களுக்கும் பெரும் பங்கு இல்லாமற் போகவில்லை.

அப்பொழுது எனக்கு வயது பன்னிரெண்டு. பள்ளிக்கூடத்திலே ஆறுவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அதே வகுப்பில் என்னுடன் படித்தான் சோணாசலம் என்னும் இளைஞன். அவன் ஏழையானாலும் மிகுந்த அழகன். கள்ளங்கபடு தெரியாதவன். அவனுடைய இனிய சுபாவம், வகுப்பிலுள்ள எல்லாரையும்விட என்னை அதிகமாகக் கவர்ந்து விட்டது. ஆகையால், அவனில்லாத இடம் எனக்கு வெறும் பாழாகத் தோன்றியது. அவனுக்கும் என்னிடம் மிகுந்த பற்று எங்கள் இருவருக்குளும் எல்லா அம்சங்களிலும் ஒற்றுமை இருந்தது. எங்கள் பழக்கம் அன்பாகச் செழித்து வளர்ந்து, கொடிவிட்டுப் படர்ந்தது. ஒருவரையொருவர் மறக்க முடியாத நிலைமையைப் பெற்றோம். அந்த வேளையில், என் வாழ்வில் திடுமென்று ஒரு மாற்றம்! "நீ பூப்படைந்துவிட்டாய். இனிமேல் வீட்டைவிட்டு வெளியே போகக்கூடாது" என்று என்னை வீட்டுக்குள் சிறைவைத்து விட்டார்கள் பெற்றோர்கள். எனக்கும் சோணாசலத்திற்கும் இடையில் ஒரு பெரிய தடைச் சுவர் எழுப்பப்பட்டுவிட்டது. ஆகவே, எங்கள் சந்திப்பும் நின்றுவிட்டது.

அமைதியில்லாமல் ஐந்து ஆண்டுகளைக் கழித்தேன். ஒரு நாள், வீட்டில் என் கல்யாணத்தைப் பற்றிய பேச்சு எழுந்தது. மாப்பிள்ளைக்கு ஒரு கண் பொட்டையாயிருந்தாலும் நல்ல அழகனென்றும், மாமன், மாமி, நாத்தனார் முதலியவர்களின் இம்சைக்கே வழியில்லையென்றும்; அவனைக் கணவனாக அடைவதைக் காட்டிலும் வேறு பாக்கியமே உலகத்தில் கிடையாதென்றும், எனக்கு உபதேசம் செய்யப்பட்டது. சோணாசலம் என் மனக்கண்ணில் தோன்

நகைத்தான். என் நெஞ்சுக்குள் பெரிய கலக்கம். எனினும், என் தைரியத்தையெல்லாம் சேர்த்துப் பிடித்துக்கொண்டு என் தாயிடம் சொன்னேன்: "நான் சோணாசலத்தைக் கட்டிக்கொள்ளுகிறேன் அம்மா'' என்று.

இதைக் கேட்டதும் தந்தை ருத்ரமூர்த்தியாக மாறிவிட்டார். அவர் கண்கள் சிவந்துவிட்டன. மீசை துடித்தது. "என்ன சொன்னாய்? அந்த செட்டிப் பையனையா கட்டிக் கொள்ளுவாய்? தடிச் சிறுக்கி. சரியான சாதி முதலியாருக்குப் பிறந்த வளாயிருந்தால், நான் சொன்ன மாப்பிள்ளையை மணக்கவேண்டும். இல்லையேல் நீ மடிந்து போனாலும் பாதகமில்லை. என் குலப் பெருமையை ஒருக்காலும் நான் இழக்கமாட்டேன்!'' என்று ஆவேசத்துடன் கர்ச்சித்தார். அதற்கு ஒத்து ஊதினாள் என் தாயும். நான் என்ன செய்ய முடியும்? பெண் பேதை! நடுங்கி விட்டேன்; பெட்டிப் பாம்பாக அடங்கிவிட்டேன்.

கல்யாண ஏற்பாடுகள் வெகு வேகமாக நடை பெற்றன. முகூர்த்த நாளும் வந்தது. வேறு வழி யின்றி, மணப்பந்தலில் அந்த லட்சாதிபதி மாப் பிள்ளையுடன் வேதனையோடு வீற்றிருந்தேன். என்னை அக்கினிக் குழம்பிலே தள்ளிவிட்டதைப் போலிருந்தது. அழுதேன். குமைந்தேன். கண்ணீர் பெருக்கினேன். ஏனென்றுகேட்பதற்கு யாருமில்லை! கல்யாணம் முடிந்தது. என் கணவரோடு நான் அவர் ஊருக்கு அனுப்பப்பட்டேன். பாவி; என் சோணா சலத்தை மனத்திலன்றி, கண்களால் பார்க்கும் பாக்கியத்தையும் பெற்றேனில்லை. அவன் என்ன நினைந்து எப்படித் துடித்தானோ?

என் கணவரின் வீடு ஏழடுக்கு மாளிகை. நிலத்தில் விரிப்பது ரத்தினக்கம்பளம், கதவுப்பிடிகள், தாழ்,குமிழ் போன்றவை வெள்ளியில்தான்! சோபா, நாற்காலி, கட்டில் முதலியவைகள் தந்தக் கடைசல்கள். பணச் செருக்கின் ஆடம்பரம் பரிபூரணமாக அங்கே நிறைந்திருந்தது. எனக்கு மாமன்,மாமி,நாத்திகள் யாரும் கிடையாது. என் கணவர் தன்னிச்சையாக விடப்பட்ட தனி மனிதர். அங்கே எவ்வளவு ஆடம்பரமும்,செல்வமும் இருந்ததோ, அவ்வளவுக்கு உண்மை அன்புக்கும், ஒழுக்கத்திற்கும், மனிதாபிமானத்துக்கும் பெரும் பஞ்சமிருந்தது.

சில ஆண்டுகள் எலியும் பூனையும்போல் அவருடன் வாழ்ந்தேன். அவ்வளவும் துன்ப வாழ்வு! என் முகத்திலே அழகு ஜொலித்துக் கொண்டிருந்தது. கண்ணே, மூக்கே என்று கொஞ்சினார். தீராத மனக்கவலை உடலைப் பாதித்து, சிறிது அழகைக் குலைத்தது; அவ்வளவுதான். நான் கசந்துபோய் விட்டேன். அன்னியப் பெண்களை நாடவாரம்பித்தார். பல புதிய சகாக்களுடன் குடிப் பழக்கமும் சேர்ந்துகொண்டது. நாளாக ஆக, நடத்தைகெட்ட பெண்களை பகிரங்கமாக வீட்டுக்கே அழைத்து வருவதும், சகாக்களுடன் கோலாகலமாகக் கொட்டமடிப்பதும், என்னை அவர்களுக்கு அடிமையாக வேலை செய்யச் சொல்வதும், செய்யாவிட்டால் உதைப்பதுமான நிலைக்கு வந்துவிட்டார்! அவரது ஒற்றைக் கண்ணிலே, அப்பொழுது நான் ஒருபெண்ணாகத் தோன்றவில்லை. பெண் பேய்மதவெறியனுக்கும், குடி வெறியனுக்கும் வாழ்க்கையில் வரம்பில்லை என்பதை அப்பொழுதுதான் நான் அறிந்தேன் என்றெண்ணிப் பதைத்தேன்.

அந்தச் சமயத்தில், ஒரு நாள் பகல்பொழுதில் வீட்டில் யாருமில்லை. தெரு வாசற்படியில் நான் மட்டும் தனியாக உட்கார்ந்துகொண்டு, என் விதியை நொந்து வருந்தி கொண்டிருந்தேன். தெருவிலே போய்க்கொண்டிருந்த ஒரு வாலிபன் தற்செயலாக என்னைப் பார்க்கும்போது, நானும் பார்த்து விட்டேன் ஆ! என்ன வியப்பு! என் உடம்பு அப்படியே சிலிர்த்துப்போய்விட்டது. மெய்மறந்தேன். "சோமசுலம்!" என்று என்னையறியாமல் கூவினேன்.

அவன் திக்பிரமை பிடித்து அசைவற்று நின்ருன். பின்னர் மெதுவாக நானிருக்கும் இடத்திற்கு வந்தான், பள்ளத்திலே பாயும் தண்ணீர்போல, நான் உள்ளே சென்றேன். என்னைத் தொடர்ந்து வீட்டுக்குள்ளும் வந்தான். அவனிடம் என்ன பேசுவதென்றே எனக்குத் தெரியவில்லை பேசாமடந்தையாக விழித்துப் பேதுற்று நின்றேன் உணர்ச்சி பொங்கி வழிந்தது இருவரது இதயங்களிலும்!

"சண்பகம்! ஏன் என்னை அழைத்தாய்? சிரமப்பட்டு, நானடைந்த கொஞ்சம் மன நிம்மதியையும் கெடுப்பது தர்மமா?" என்று கேட்டான் சோமசுலம். அவன் பார்வையிலே சோகம் ததும்பியது கேள்வியின் அர்த்தம் அப்போது எனக்குப் புரியவில்லை

வெகு சிரமத்துடன் கேட்டேன்: "நீ கல்யாணம் செய்துக் கொண்டாயா?" என்று.

"கல்யாணமா? எனக்கா? நானேன் செய்துகொள்ள வேண்டும்? என் இதயத்திலே குடியேறி

விட்டவள் நீ! உன்னை அப்புறப்படுத்தவும் முடியுமா? உண்மையாகச் சொல்லுகிறேன். நீ எங்கே எப்படி யிருந்தாலும், நான் மானசிக உலகத்தில் உன்னோடு வாழ்ந்து தான் வந்தேன். சண்பகம்! நான் துரதிருஷ்டசாலி. இறுதியில் உன்னை நேரடியாகச் சந்தித்துவிட்டேன்; நான் என்ன செய்யட்டும்?'' என்று கேட்டான் சோணாசலம். அவன் உதடுகள் துடித்தன. கண்களிலே நீர் ககரத்தது.

அவனது நிலையும், உணர்ச்சிகரமான கேள்வியும் உள்ளத்திலே பெரும் சூறாவளியை எழுப்பி விட்டன! அதே சமயத்தில் என் நிலைமையை எண்ணிய போது,மின்னலும் இடியுமாகக் குமுறியது நெஞ்சம். தடுமாற்றக் குரலில் நான் கூறினேன்:

"சோணாசலம்!உன் அன்பு உண்மையானதாக—பரிசுத்தமானதாக இருந்தால், நீ இங்கிருந்து உடனே போய்விடு. மறுபடியும் என் கண்ணில் படவே வேண்டாம். இப்பொழுது நான் பிறன் மனைவி! போ! போய்விடு!'' என்று.

அவன் வேதனையோடு வெறித்து நோக்கினான். அந்தக் கண்களிலே தோன்றிய அசாதாரண ஒளி, என் மனதைக் குத்திக் குடைந்தது. அழுகை பீறிட்டது. கரங்களால் முகத்தை மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதேன். ஆம்! மறுபடியும் நான் கண் திறந்து பார்த்தபோது, சோணாசலம் அங்கில்லை மறைந்துவிட்டான்,அந்த உத்தமன். பெரிய அபவாதத்தினின்றும் என்னைக் காப்பாற்றி விட்டான் கண்ணியம் வாய்ந்த என் காதலன்.

ஆனல், நான் பாவி; மறைவென்ன? முழுமையுமே சொல்லி விடுகிறேன். அன்று இரவே, என்னை

மணந்த கணவரால், அவரது நண்பர் ஒருவருக்கு நான் பெண்டாளக் கொடுக்கப்பட்டேன். என் நெஞ்சம் குமைந்தது. அச்செயலுக்கு நான் ஒப்பவில்லை. மானத்தை உயிரினும் மேலாக மதித்தேன். கதறியழுதேன். கனன்று சீறினேன். அப்பொழுது என் கணவர் என்ன சொன்னார் தெரியுமா?

'மந்தியானம், நானில்லாதபோது தடிப்பயல் ஒருவன் உன்னிடம் கொஞ்சியது எனக்குத் தெரியுமடி. அவனைவிட என் நண்பன் கேவலமா? நான் சட்டப்படி உன் கணவன். நீ பதிவிரதையென்றால், என் சொற்படி நடக்கவேண்டும். இல்லையேல் இப்பொழுதே வீட்டைவிட்டுத் துரத்திவிடுவேன்.''

அந்தச் சொல்லம்புகள் கடுமையாகப் பாய்ந்து என் மார்பைத் துளைத்து விட்டன. "இருப்பதா? போவதா?'' என்ற பிரச்னை, என் மனதில் பொங்கியெழுந்தது. பலவாறு குழம்பினேன். முடிவில் என் உள்ளத்தில் வளம் பெற்றது விடுதலைத் தாகம். அதன் விளைவு வேறு என்னவாக இருக்க முடியும்? வீட்டைவிட்டு,கட்டிய சேலையும் கையுமாகத் துரத்தப் பட்டேன்! நான் ஒரு அனாதையானேன். எனக்கு வாழ்வு மட்டுமல்ல, உலகமே இருண்டுவிட்டதைப் போலத் தோன்றியது. நண்பகல்; அபவாதத்தை விரும்பாது, நல்ல மனைவியின் கடமையை சோனாசலத்திற்கு உணர்த்தினேன். இரவு; அதே அபவாதத்தை ஏற்க மறுத்ததின் விளைவாக வீட்டைவிட்டுத் துரத்தப் படுகிறேன் கடமை தவறிய கணவனால்! என்ன உலகம்! என்ன மனிதர்கள்! இவர்களுக்கிடையே என்ன செய்வது? எப்படி வாழ்வது?

என் புத்தி பேதலித்துப் போய்விட்டது. இரவு ஒன்பது மணிவரையில் தெருத்தெருவாயலைந்தேன்.

நான் விரட்டியடித்த சோணசலத்தை மீண்டும் காணமாட்டோமா என்று தவியாய்த் தவித்தது என் மனம். அடுத்த விநாடி: "உயிர் வாழ்வதாயிருந்தால்தானே" என்ற எண்ணமும் தோன்றாமலில்லை.

இன்று போலத்தான் அன்று, வானத்தில் வெண்ணிலவு காய்ந்து கொண்டிருந்தது. ஊரடங்கி விட்டது. மனம் போன போக்கில் நான் நடந்து கொண்டிருந்தேன். காவிரியின் படித்துறையில் ஒரு குஞ்சுமில்லை. பாதங்கள் மட்டும் தண்ணீரில் நனையும் படியாக, ஒரு படியின் மீது உட்கார்ந்தேன். "சோ" வென்ற சப்தத்துடன் புரண்டு செல்லும் ஆற்று வெள்ளம், என் இதயத்தைப் பிரதிபலித்தது. கைகளைக் கன்னத்தில் ஊன்றிக் குனிந்தவண்ணம் யோசித்தேன். பழைய சம்பவங்களெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக ஓடி வந்தன, நிழற் காட்சிபோல்.

பள்ளிப் பருவத்திலிருந்து சோணசலத்திடம் நான் கொண்ட அன்பு, அது காதலாக மாறிப் பயன் தரும் வேளையில் பெற்றோர்கள் மறுப்பு, சாதிவெறி பிடித்த தந்தை கட்டாய மணத்திற்குக்கிட்ட பலி, இதயமற்ற இலட்சாதிபதிக் கணவனால் பட்ட துயர் யாவும் என் உள்ளத்திரையிலே தோன்றின. நெஞ்சைப் பிளந்துகொண்டு நெடிய பெருமூச்சு வந்தது. "எதை நினைத்தும் பயனில்லை, இனி வாழ்வதில் நலமில்லை" என்ற முடிவுக்கு வந்தவளாய், எழுந்து நின்றேன். உலக வெறுப்பு என் உள்ளத்தை பயங்கரமான முடிவுக்கு இழுத்துச் சென்றது. எதிரில் ஒரே சூனியம். ஆறுதான் எனக்கு ஆறுதலளித்தது. அந்த நல்லாளைக் கட்டியணைக்க முயன்றேன்.

பின்னாலிருந்து தோள்களின் மீது இரண்டு கரங்கள் விழுந்தன. திடுக்கிட்டுத் திரும்பினே

சோணாசலம், என்னைப் பார்த்துச் சிரித்தவண்ணம் நின்றுகொண்டிருந்தான். கண்களை நம்ப முடிய வில்லை! என்னையறியாமல் என் உடல் புளகித்தது. என் கருத்தோட்டம் திசை மாறிற்று. சற்று முன்பு இருள் நிரம்பியிருந்த என் பாழும் மனத்தில், ஒரு புதிய ஒளி தோன்றியது! மீண்டும் வாழ்க்கையில் பற்றுதல் படர்ந்தது. நான் ஏன் சாகவேண்டும், என் சோணாசலம் இருக்கும்போது என்று நினைத் தேன். அவனது கைகளை மெல்லெனப் பற்றினேன். மன்னிக்க வேண்டினேன். அந்தப் பால்நிலவில், காவிரியின் மணற் பரப்பிலே சென்று இருவரும் அமர்ந்தோம். என்னென்னவோ பேசினோம். சோணாசலம், துன்பம் நிறைந்த தன் கதையைச் சொன்னான். அதைக்கேட்டு என் மனம் உருகியது. அன்று இரவே நாங்கள் வேறு ஊருக்குப் புறப்பட்டு விடுவதென்று முடிவு செய்தோம். புதிய உற்சா கத்தோடு வழி நடந்தோம். மறுநாள் காலை, சட்டநாத புரம் என்ற ஊரையடைந்தோம்.

அங்கு விவசாயக் கூலி செய்துகொண்டு, தனிக் குடித்தனம் நடத்தினோம். அப்பொழுது எனக்கு, வாழ்க்கையின் லட்சியத்தை—உயர்வை உணர்த்தி னார் சோணாசலம். நாங்களிருவருமே வாழப் படைக் கப்பட்டோம்; சுவையறிந்து வாழ்ந்தோம். அந்த லட் சாதிபதிக் குருடனின் ஏழடுக்கு மாளிகை, எங்கள் மண்குடிசைக்கு ஈடாகாது. அந்த தந்தக் கட்டில்கள், பஞ்சு மெத்தைகள், எங்கள் கோரைப்பாய் தந்த இன்பத்தை யளிக்குமா? என்ன இன்பம்! என்ன சுவை! மகிழ்ச்சி நிறைந்த எங்கள் வாழ்வு, இரண் டாண்டுகள் மகோன்னதமாக நடந்தது. ஆம், எனது நல்லகாலமும் அவ்வளவுக்குத்தான் நிலைத்திருந்தது.

இதயம் மெலிவுற்ற சோணாசலம், உடலுழைப்பு தாங்காமல்நோயுற்றுப் படுக்கையில் வீழ்ந்தார். எளிய சிகிச்சைகள் பயன் தரவில்லை. இரண்டு மாதங்களில் அந்தோ! அவர் முடிவெய்திவிட்டார். நான் கலங்கினேன்; கதறினேன்; பைத்தியம்போல் பிதற்றினேன்; விழுந்து புரண்டேன்; மண்டையை உடைத்துக்கொண்டேன். என்னசெய்தும் இறந்த சோணாசலம் எழுந்திருக்கவில்லை!

என் வாழ்க்கையின் விருப்பங்களைச் சேர்த்து மூட்டை கட்டி, அவரது சவக்குழியிலேயே புதைத்துவிட்டேன். பூத்துக் குலுங்கிய என் இதயம், வெறும் பொட்டல் காடாகி விட்டது. கணவன் வீட்டுக்குச் செல்லவோ மனம் இடந்தரவில்லை. மரியாதையோடு வாழ வேண்டுமானால், அந்தப் பக்கமே போகலாகாதென்று தீர்மானித்தேன். ஆனால், மரியாதையோடு வாழ்ந்தேனா? கேளுங்கள் கதையை:

அப்பொழுது, அனாதை என்ற பதத்திற்கு முழு இலக்கியமாக விளங்கினேன். நிம்மதியான இரண்டாண்டு வாழ்க்கையிலே, அழிந்துபோன என் அழகு இளமையைக் கொஞ்சம் பெற்றிருந்தேன். பெண்மையின் வனப்பு தலைதூக்கிற்று. எனவே, பலர் என்மேல் கண்ணெறிந்தனர்; கனிவு மொழி பேசினர். அவர்களிடமிருந்து தப்ப, நான் எங்கே ஓடுவது? எங்கே மறைவது? அந்தச் சமயத்தில் ஒரு செல்வப் பிராம்மணர் என்னைத் தன் வீட்டு வேலைக்காரியாக அமர்த்திக்கொண்டார். சாப்பாடு போட்டு, சொற்ப சம்பளமும் கொடுத்தார்.

இரகுநாத ஐயங்கார் ஒரு மிராசுதார். வயது நாற்பதுக்குள்தானிருக்கும். எனினும் அவ

பிரசித்திபெற்ற வைதிக சனாதன தர்மி. இந்து மகாசபையின் பிரமுகர். அவரது பேச்சுக்கள் அனைத்தும் இந்துமத ஆச்சாரங்களை அரண் செய்வதாகும். பிராம்மணன் மேல்குலத்தான் என்பதை எங்கும் விட்டுக்கொடுக்கமாட்டார். அவரது மனைவி—அந்த அம்மாள்—அதற்கு மேல்! அவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள். அவர்களது கண்களிலும், வாயிலும்; நான் இழி பிறப்பு, சூத்திரச்சி; என்னைத் தொட்டுவிட்டால் ஒட்டிக்கொள்ளுமாம் தீட்டு! இப்போது நினைத்தாலும் என் வயிறு எரிகிறது!

சில மாதங்கள் சாதாரணமாக நகர்ந்தன. என் பாட்டுக்கு வேலைகளைச் செய்துவந்தேன். வரவர ஐயங்கார் என்னைப் பார்க்கும் பார்வை, ஒரு மாதிரியாக இருந்தது. என் மனதில் சந்தேகம் விழுந்தது. மற்றவர்கள் எதிரில் என்னை "பிள்ளே" என்றும், "சூத்திரச்சி" என்றும் கூப்பிட்டுவிட்டு, தனியே காணும்போது பிரியமாக "சண்பகம்!" என்றால் நான் என்ன நினைப்பது? ஆம்! என் சந்தேகமும் பொய்த்துப் போகவில்லை.

ஒருநாள் இரவு, ஐயங்கார் வீட்டில் எல்லோரும் கோவிலில் நடக்கும் உற்சவத்திற்குப் போய்விட்டார்கள். நான் மட்டும் தனிமையில் வீட்டுக் காவலாக வாசல் நடையிலே படுத்துக்கொண்டிருந்தேன். சிறிது நேரங்கழித்து ஐய்யங்கார் மட்டும் திரும்பி வந்தார்; கதவைத் திறந்து விட்டேன். மளமளவென்று அருகே வந்தவர், என் கையைப் பற்றினார்.

நான் திடுக்கிட்டேன். "என்ன சாமி?" என்று கேட்டேன். "உன்னுக்கு வாயேன் சொல்றேன்"

என்று கூறி, என்னை இழுத்துச் சென்றார் வீட்டுக் குள். மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு சென்றேன். உள்ளே சென்றதும், என் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டார். கொஞ்சும் குரலில் அவர் கூறினார்: "சண்பகம்! நான் ஜாதியில் பிராம்மணன். மேலும் உனக்கு எஜமானன், என்றா லும், இப்போது நான் உன் அடிமை. மகாலக்ஷ்மி போன்ற உன் வடிவழகு, என் மனதைக் கொள்ளை கொண்டுவிட்டது...சம்மதித்தால், காசுபணத்திற்குக் குறைவே கிடையாது. உம்......" அவர் கண்களி லிருந்து கொட்டிய காமம், என் நெஞ்சிலே மூண்டெழுந்த ஆத்திரத் தீயைப் பெருக்கிற்று. "ரொம்ப அழகுதான்! படிப்பது பாகவதம்; இடிப்பது கிருஷ்ணன் கோயிலா? பேசுவது: நான் சூத்திரச்சி, தொட்டால் தீட்டு ஒட்டிக்கொள்ளும் என்று; நடவடிக்கையில் இப்படியா? சாமி! நான் அனாதை, உங்கள் வேலைக்காரி என்பதனாலேயே இந்த மானங் கெட்டகாரியத்துக்கும் இணங்கவேண்டுமா? இப்படித் தான் உங்கள் சாஸ்திரம் சொல்லுகிறதா?" என்றேன். கட்டியணைத்தார் என்னை. என் இதயம் படபடத்தது; எட்டித் தள்ளினேன். "ஐயா! உமது நெஞ்சில் ஈவு, இரக்கமில்லையா? உங்களுக்குப் பெண்டு பிள்ளைகள் இருக்கத்தானே செய்கிறார்கள்! உங்கள் மகளை எவனாவது இப்படிக் கட்டியணைத் தால் விடுவீர்களா?" என்று கேட்டுவிட்டேன்.

ஐயங்காரின் மனதிலே இது சுருக்கென்று தைத்துவிட்டது. அவர் கோபவிழி விழித்தார். "ஏது! கெட்ட வாயாடியாக இருப்பாய் போலிருக்கிறதே மரியாதையோடு இணங்குகிறாயா, இல்லையா? அப்ப

மறைந்துகிடக்கும் என் மிருகத்தனத்தை நீயே தூண்டியதாக ஏற்பட்டுவிடும். எத்தனையோ சண்டிகளை நான் பார்த்திருக்கிறேன். விடப்போவதில்லை. முடிவு பலாத்காரந்தான்; அடியே! சீரழிந்துவிடுவாய்; இணங்கிவிடு!'' என்று மிரட்டினார் மிராசுதார்.

என் மனதில் ஆத்திரம் காட்டு வெள்ளம் போலப் புரண்டு வந்தது. “பார்ப்பாரப்பயலே! என்ன ஆணவம் உனக்கு? உன்னையும் பார்த்தேன், உன் எஜமானத்தனத்தையும் பார்த்தேன். என் உயிரே போவதானாலும் நான் உடன்படப் போவதில்லை. தூ! மானங்கெட்டவனே! நீயும் ஒரு மனிதனா?'' என்று ஆவேசத்துடன் அவன் முகத்தில் காறியுமிழ்ந்தேன். மடமடவென்று அந்த வீட்டினின்றும் வேகமாக வெளியேறினேன்.

இவ்வாறு விடுதலை பெற்ற நான், அந்த இரவை ஊர்க்கோடியிலுள்ள ஒரு கிழவியின் குடிசையில் கழித்தேன். பொழுது புலர்ந்தது. என் மனதிலே கவலையிருந்தது. அந்த ஊரில் மிராசுதார் இரகுநாத ஐயங்காருக்குள்ள செல்வாக்கு எனக்கு நன்றாகத் தெரியும். அவர் நாவசைத்தால் நடவாத காரியமில்லை. அவரது குணமும் தெரிந்துவிட்டது. இரவுக்குள் அடுத்த ஊருக்குச் சென்றுவிட வேண்டுமென்று துடித்தேன். “அவன் ஏதாவது தீங்கு செய்வானோ'' என்ற பயம் என்னைப் பிடித்து உலுக்கியது.

அருணன் மலைவாய்க்குள் மறைந்து கொண்டிருந்தான். இருள் மெதுவாக எங்கும் படர்ந்தது. நான் ஊரைத்தாண்டி, பாதையிலே வேகமாக நடந்துகொண்டிருந்தேன். அந்தச் சாலையில்

அப்பொழுதே மக்கள் நடமாட்டம் நின்றுவிட்டது. அந்தச் சமயத்தில், திடீரென்று நான்கு முரடர்கள் எங்கிருந்தோ வந்து என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். நான் அஞ்சிப் பதைத்தேன். ஐயோ என்று கூச்சலிட்டு அலறினேன். ஒரு இரும்புக்கரம் என் கழுத்தை நெறித்தது. "சப்தம் செய்தால் கொலை செய்யப்படுவாய்" ஆயுதம் காட்டி இவ்வாறு எச்சரிக்கப்பட்டேன். கணநேரத்தில் என் வாயில் ஒரு துணிப்பந்து திணிக்கப்பட்டது. திமிறினேன், பயனில்லை எனது கைகால்கள் கட்டப்பட்டன. என் தலை சுழன்றது. மூட்டைபோல் என்னைத் தூக்கிக் கொண்டு நடந்தனர் காட்டிற்குள். அந்தோ! என் நிலைமை........?

நன்றாக இருட்டிவிட்டது. மனித சஞ்சாரமற்ற காட்டிலே, சிறு குடிசையொன்றில் ஓலைப்பாய் மீது நான் கிடத்தப்பட்டேன். மங்கலான சிறு விளக்கும், பாயும் தவிர, அந்தக் குடிசையில் வேறு ஒன்றுமில்லை. "என்னை என்ன செய்யப்போகிறார்களோ?" என்பதை எண்ணிப் பார்த்தபோது என் உயிரில் பாதி போயேவிட்டது! வியர்த்து விறுவிறுத்து, உடம்பு சில்லிட்டுப் போயிற்று.

சிறிது நேரங்கழித்து, குடிசைக்கு வெளியே எஜமான் இரகுநாத ஐயங்காரின் குரல் கேட்டது. பலர் 'கிசுகிசு' வென்று பேசிக்கொள்வதையும் உணர்ந்தேன். எனக்கு விஷயம் ஒருவாறு விளங்கிப் போய்விட்டது. தேகம் கிடுகிடென்று நடுங்கிற்று!

நான் எதிர்பார்த்தபடியே என் கை கால்கள் கட்டவிழ்த்து விடுவிக்கப்பட்டன. வாயில் அடைத்திருந்த துணிப்பந்து எடுக்கப்பட்டது. அதே சமயத்தில் ஐயங்கார் உள்ளே நுழைந்தார், சினத்த

சிவந்த சிரித்த முகத்தோடு பகீரென்று பற்றி எரிந்தது என் நெஞ்சம்!

"சாமி! நான் அபலைப் பெண். கோபத்தால் தப்பு செய்துவிட்டேன்; மன்னிக்க வேண்டும். தயவு செய்து என்னை விட்டு விடுங்கள். உங்கள் காலைக் கட்டிக்கொள்ளுகிறேன்" என்று கரம் கூப்பி வேண்டினேன்; கெஞ்சி மன்றாடினேன். அந்தக் கல்மனம் கரையவில்லை, அவன் சிரித்தான். ஏளனமாக உரக்கச் சிரித்தான். என் உயிர் அப்படியே துடித்துப் போய்விட்டது! பிறகு நடந்த மாபெரும் அக்கிரமத்தை, கோரக் கொடுஞ் செயலை, அந்தோ! நான் எப்படிச் வாய்விட்டுச் சொல்லுவேன்!........ பச்சைக் கிளி ஒன்று; பசித்த பூனைகள் ஐந்து!

உயிரினும் மேலாக மதித்த என் மானம், என் கற்பு, நான் பதறப் பதறப் பறிபோயிற்று. இராகுகாத ஐயங்கார் முதலாக, ஐந்து பேர்களும் மிருகத்தனமாக—மிகவும் கேவலமான இழிந்த முறையில், என்னை அனுபவித்தார்கள்! சித்திரவதை செய்தார்கள்! அப்பொழுது நானடைந்த வேதனை, ஐயோ! என் வாயால் சொல்லும் தரமன்று; நெஞ்சால் நினைக்கவும் பயமாயிருக்கிறது. முதல் மிருகத்தின் அணைப்பிலேயே நான் உணர்ச்சியற்றுப் போனேன்; அப்புறம் நினைவிழந்தேன், அப்புறம்... அந்தோ! நான் அப்படியே செத்துப்போயிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்!

மீண்டும் எனக்கு சுயநினைவு வந்தபோது, நான் ஒரு ஆஸ்பத்திரியிலிருப்பதை உணர்ந்தேன். என் உடம்பில் வீக்கமும், வலியும், காயமும் இடம் பெற்றிருந்தன. சிகிச்சைகள் செய்யப் பெற்றேன். நான்

எப்படி இங்கு வந்தேன் என்பதை நர்சுகளிடம் விசாரித்தேன். சட்டநாதபுரத்திலிருந்து தருமபுரிக்குப் போகும் பாதையிலே, ஒரு புளியமரத்தடியிலே சவம் போலக் கிடந்தேனாம்; அந்த வழியாக மோட்டாரில் வந்த யாரோ ஒரு தோழர், என்னை ஆஸ்பத்திரியில் எடுத்துவந்து சேர்த்தாராம். அங்கு நான் ஒரு அனாதை என்பதாகப் பதிவு செய்யப்பட்டிருந்தேன். ஆம்! பிறகென்ன "இலட்சாதிபதியின் மனைவி" என்று பதிவு செய்வார்கள் பாழடைந்தவளை?

ஆனால், ஒரு விசித்திரம். எனது லட்சாதிபதிக் கணவரும் அப்போது அந்த ஆஸ்பத்திரியிலேதான் படுத்துக் கிடந்தார்! தனது நண்பனின் மனைவியொருத்தியைப் பெண்டாள முனைந்ததன் விளைவாக கால் ஒடிக்கப்பட்டு, கைவிரல்கள் துண்டிக்கப்பட்டு சிகிச்சைக்கு வந்தாராம். இப்பொழுது அவரும் லட்சாதிபதியல்லவாம். கள்ளிலும், காமத்திலும் சொத்துக்களைக் கரைத்துவிட்டாராம்!

தன்வினை தன்னைச் சுடும்" என்பார்கள். அவர் வினையை அவர் அனுபவித்தார். ஆனால் என் வினை?.... நான் யாருக்கு என்ன தீங்கு செய்தேன்? மதம் பிடித்த ஐயங்காரின் காமவெறியைத் தணிக்காதது என் குற்றமா? அதற்காக நான் இக்கதிக்கு ஆளாகவேண்டுமா? குற்றம் செய்தவர்க்கும் தண்டனை, செய்யாதவர்க்கும் தண்டனையா? பலவாறு குழம்பினேன். நடந்ததை நினைந்து நினைந்து வெறுப்பும், வேதனையுமாக நாட்களைக் கழித்தேன்.

ஆஸ்பத்திரியிலே எட்டு நாட்கள் ஓடின. படிப்படியாக எனது நோய் குணமடைந்தது. எனினும் உடல்நலம் குலைந்துவிட்டது. அழகு சிதைந்தபோ


சாறுபிழிந்த சக்கைபோலானேன்! "என்னைத் தொட்டு தாலிகட்டியவரைப் பார்த்தால் என்ன!" இப்படி மனதிலே முளைவிட்டது ஓர் ஆவல். "தீதற்ற என்னைத் தெருவிலே விரட்டியடித்தவர்தான். என்றா லும் கேடுற்றுக்கிடக்கின்றாரே; ஆறுதல் கூறலாமே" என்று கருதினேன். அவர் ஆண்கள் வார்டில் இருந் தார். ஒரு நர்சு மூலம் மெதுவாக என் விருப்பத்தைப் படரவிட்டேன். இதன் விளைவோ என்னவோ தெரியவில்லை. அன்று இரவே என் கணவர் யாருமறி யாது நகர்ந்து சென்று, ஆஸ்பத்திரிக் கிணற்றிலே விழுந்து தற்கொலை செய்துகொண்டார்! எடுத்துப் போட்டிருந்த அவரது பிணத்தைத்தான் சென்று பார்த்தேன். கண்கள் கலங்கின, என்ன செய்வது?

மறுநாள் காலை அவரது உறவினர்கள் வருவார் கள். நான் அங்கிருப்பதைப் பார்த்தால்....? சங்கட மாக இருந்தது எனக்கு. எனவே, அதிகாலையிலேயே ஆஸ்பத்திரியைவிட்டு வெளியேறினேன். எங்கே போவது? எப்படி வாழ்வது? உழைக்கவும் உடலில் தெம்பில்லையே! சாகவும் துணிவில்லையே! கால்கள் போன போக்கில் நடந்தேன். பசியோ வயிற்றைக் கிள்ளியது. மானம், குலம், கல்வி, வன்மை, அறி வுடைமை, தானம், தவம், முயற்சி அத்தனையும் மிஞ்சிக்கொண்டு தீப்போலச் சுட்டெரித்தது வயிற் றுப் பசி. ஆம்! வேறு வழியில்லை; பிறரது உதவி நாடினேன்; இரந்து வாழத் தொடங்கினேன். அன்றுமுதல் நான் பிச்சைக்காரியானேன்!

"இந்தப் பிராம்மணர் சிரார்த்த நாளில் சோறு கேட்டதற்காக என்னைத் திட்டினார். கழுதையென்று ஏத்தினார் குளம் குட்டையிலே விழச் சொன்னார்.

ஆச்சாரமில்லையா; சாஸ்திரமில்லையா; பிராம்மண தர்மத்தை விடுவதா என்று விரட்டினார்; சனியனே என்று சபித்தார். இவர் சனாதன தர்மி; ஆனால் என்னைக் கற்பழித்துச் சித்திரவதை செய்த இரகுநாத ஐயங்கார் சனாதன தர்மி மட்டுமல்ல, அதனைப் பாதுகாக்கும் பரமாத்மா! இன்று, அவர் இந்து மகாசபைத் தலைவர்! சட்டநாதபுரத் தொகுதியின் சட்டசபை உறுப்பினர். இவர் இவ்வூரில் எப்படி பிராம்மண தர்மத்தைக் காப்பாற்றுகின்றாரோ, இதுபோல் அவர் அங்கெல்லாம் காப்பாற்றுகின்றார்! ஆனால், இவர்கள் காப்பாற்றுகிற சனாதன தர்மமே—சாதிமுறைச் சம்பிரதாயங்களே என் வாழ்வைக் குட்டிச் சுவராக்கினவை. அவற்றைக் காப்பாற்ற ஆளிருக்கிறது. ஆனால் என்னைக் காப்பாற்றத்தான் நாதியில்லை!'' அவளது கண்ணிமைகளிலே, பொங்கியெழுந்த நீர்த்திவலைகள் கரகரத்தன.

'நாங்கள் இருக்கிறோம் சண்பகம். கவலைப் படாதே!''என்ற கனிவுக் குரல் கேட்டது. பின்னால் திரும்பிப் பார்த்தேன். கண்களினின்றும் வழிந்த நீரை, தன் முந்தானையால் துடைத்தவண்ணம் நின்று கொண்டிருந்தாள் என் துணைவி!



# தீஞ்சுவைத் தென்றல் வெளியீடுகள்

தோழர், ப. கண்ணன் எழுதிய

| | | |
|---|---|---|
| புரட்சிப் பாடகன் | .... | 1—8—0 |
| ஜமீன்தார் | .... | 1—0—0 |
| சிந்தனைச் சித்திரம் | ... | 0—10—0 |
| கன்னியின் சபதம் | .... | 0—8—0 |
| மின்னொளி | .... | 0—6—0 |

கலைஞர், மு. கருணாநிதி எழுதிய

| | | |
|---|---|---|
| ஒரே முத்தம் | .... | 1—4—0 |

தோழர், சி. பி. சிற்றரசு எழுதிய

| | | |
|---|---|---|
| சிந்தனைச் சுடர் | .... | 0—5—0 |

இரா. நெடுஞ்செழியன் M. A. தமிழாக்கம்

| | | |
|---|---|---|
| சமுதாய விடுதலை அறிஞர், இங்கர்சால் | | 0—12—0 |

பாவலர், வேலாயுதசாமி எழுதிய

| | | |
|---|---|---|
| திருக்குறள் இசைப்பாடல்கள் | .... | 0—7—0 |
| அறிவுத் துளிர் | .... | 0—3—0 |

தோழியர், குஞ்சிதம்—வடிவேலு எழுதிய

| | | |
|---|---|---|
| கெட்டிக்காரன் | .... | 0—2—6 |
| பைங்கிளி | .... | 0—2—0 |
| வால்முளைத்த சாமியார் | .... | 0—2—0 |
| ஆலமரத்துப் பேய் | .... | 0—2—0 |
| அன்புமணி | .... | 0—2—0 |

விற்பனையாளருக்கு ஏற்ற கழிவு தரப்படும்.

## தென்றல் நூற்பதிப்புக் கழகம்,

சலகண்டபுரம் :: சேலம் மாவட்டம்.